விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii



பெங்களூரு வெற்றி

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 100 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 15 சனிக்கிழமை (29.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## பிரதம நீதியரசர் ஷிராணியை மகிந்த பதவி நீக்கியமை தவறு

### பகிரங்கமாக ஒப்புக் கொண்டார் நாமல்



(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவி நீக்கியமை தவறு என அவரது மகன் நாமல் ராஜபக்ஷ பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## மாணவியை அடித்த ஆசிரியர் கைது

(பருத்தித்துறை)

பாடசாலை மாணவி ஒருவரை தடியால் அடித்த குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பகுதியில்

15ஆம் பக்கம் பார்க்க

## பாரதப் பிரதமர் மோடி ஏப்.4 இல் இலங்கை வருவார்

### உறுதி செய்தது இந்திய வெளிவிவகார அமைச்சு

(கொழும்பு)

பாரதப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என இந்திய வெளிவிவகார அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இதுகுறித்து அவ் அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி இலங்கை வரும் பாரதப்

15ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை பாரப்படுத்துங்கள்

### பிரிட்டனைக் கோருகிறார் உருத்திரகுமாரன்



(வோஷிங்டன்)

இனப்படுகொலை மனித குலத்திற்கு எதிரான குற்றம். எனவே யுத்தக் குற்றங்களிற்காக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தும்தீர்மானத்தை மனித உரிமை பேரவையில் பிரிட்டன் கொண்டுவர வேண்டும் எனத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விஸ்வநாதன் உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவமாயினும் குற்றம் குற்றமே

## பிரிட்டனின் தீர்மானத்தை ஆதரித்தார் சரத் பொன்சேகா

(கொழும்பு)

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தால் இராணுவத்தினராக இருந்தாலும் தண்டிக்கப்பட்டே ஆக வேண்டும் அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதிகள் உள்ளிட்ட நால்வருக்கு எதிராகப் பிரித்தானியா விதித்துள்ள

04ஆம் பக்கம் பார்க்க

## மியன்மார் - தாய்லாந்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

### 153 பேர் பலி : 732 பேர் காயம்



15ஆம் பக்கம் பார்க்க

## பிரிட்டன் தடைகள் மூலம் சர்வதேச விசாரணையை வலியுறுத்த முயற்சி

### ஒருபோதும் இடமளியோம் என்கிறார் வாசுதேவ



(கொழும்பு)

"இலங்கையின் முன்னாள் படைத் தளபதிகள் மூவர் உட்பட நால்வர் மீதான தடை மூலம் எமது நாட்டில் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படும் போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற செய்தியையே பிரித்தானியா வழங்கியிருக்கின்றது.

04ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமைகள் பற்றிப் பேச பிரிட்டனுக்குத் தகுதியில்லை

### புலிகளை மீளுருவாக்க வேண்டாம் பிரிட்டனை எச்சரிக்கிறார் - விமல்

(கொழும்பு)

1815ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கையில் மனிதப் படுகொலைகளைப் படுமோசமாக நடத்தி, காடுகளை அழித்துப் பல்லாயிரக்கணக்கான யானைகளைக் கொன்று தந்தங்களையும் பெறுமதியான சொத்துக்களையும் கடத்திச்

15ஆம் பக்கம் பார்க்க

### நிராகரிக்கப்பட்ட மனுக்கள்

## தேர்தல் திணைக்களத்துடன் கலந்துரையாட சந்தர்ப்பம்

### உயர்நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ்.மாநகர சபைக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் தேர்தல்கள் திணைக்களத்துடன் கலந்துரையாடுமாறு உயர்

04ஆம் பக்கம் பார்க்க

## படையினர் குற்றவாளிகள் புலிகள் அரசியல் கைதிகள்

### நியாயமற்றது என்கிறார் அலி சப்ரி



(கொழும்பு)

எங்கள் நாட்டை விடுவித்தவர்களிற்கு தண்டனை விதிக்கும் அதேவேளை குற்றவாளிகள் எனத் தீர்ப்பு வழங்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை அரசியல் கைதிகள் எனத் தெரிவித்து அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என வேண்டுகோள்

04ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா[illegible]க்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் உரும்பிராய்ப் பகுதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- பலாலி வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்.
- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- உரும்பிராய் பெற்றோல் செற் முன் வீதியில் உள்ளது.
- பயன் தரும் தென்னைகள் உள்ளன.
- நல்ல சுற்றுச் சூழல், குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- ஒரு பரப்பின் விலை 64 இலட்சம்.
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் :
  காலை 6 மணி தொடக்கம்
  மாலை 6 மணி வரை

(3779)

தொடர்புகளுக்கு : ஜெயம்

**077 814 7389,**
**077 986 5457**

# புதுக்கடை திறப்பு விழா

## சிவசக்தி இரும்பகம்

மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி, கரவெட்டி.

கடந்த 65 ஆண்டுகளுக்கு மேலாக நெல்லியடி பஸ் நிலையம் முன்பாக இரும்பு வர்த்தகம் செய்து வந்த சிவசக்தி இரும்பகம் எதிர்வரும் 31.03.2025 திங்கட்கிழமை முதல் நெல்லியடி பஸ் நிலையத்தில் இருந்து மத்திய கல்லூரி வீதியில் 100 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள புதிய கட்டிடத்தில் தனது இரும்பு வர்த்தக ஸ்தாபனத்தை புதுப்பொலிவுடன் ஆரம்பிக்கின்றார்கள்.
இவ் விழாவிற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தங்கள் நல்வரவை நாடும்*
**பஞ்சாட்சரம் தயாபரன்**
**தயாபரன் உதயசங்கர்**

60 - 40 அடி நீள அகலமுள்ள கடை வாடகைக்கு விடப்படும்.

(3749)

# தேவை

காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்துக்காக மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட J/425, J/426, J/428 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் மாமுனை தொடக்கம் மருதங்கேணி வரையான கடற்கரை வீதிக்கு இரு புறமும் காணிகளை வாங்குவதற்கும் நீண்ட கால குத்தகைக்கு பெற்றுக்கொள்ளவும் தயாராக உள்ளோம்.

இந்தப் பிரதேசங்களில் காணிகளை விற்கவோ அல்லது குத்தகைக்கு வழங்கவோ விரும்பியோர் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ எங்களைத் தொடர்பு கொள்ளவும்.


நிறுவனம் :
**Musalpetti Wind Power (Pvt) Ltd**
முகவரி :
**இல 310, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
தொலைபேசி இல : **077 455 9949**

(3745)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

# மரண அறிவித்தல்

மலர்வு 19 - 04 - 1936



உதிர்வு 27 - 03 - 2025

**திரு. தம்பையா கணபதிப்பிள்ளை**
**(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர்)**

மந்திகை புலோலியைப் பிறப்பிடமாகவும் சாயி இல்லம் இமையாணன் மேற்கு உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தும்பளை பருத்தித்துறை பிரதேச சபையின் ஓய்வு பெற்ற முன்னாள் பிரதம எழுதுவினைஞருமான திரு. தம்பையா கணபதிப்பிள்ளை அவர்கள் 27.03.2025 வியாழக்கிழமை இறைவனின் திருப்பாதங்களைத் தழுவிக்கொண்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற நவமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவஞானம், பரராயசிங்கம், பூரணம், மகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் யோகதர்சினி (நோர்வே), கருணைரூபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயகுமார் (வறணி), மாலதி (சாரையடி, புலோலி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் திலக்சன், அபிசன், ஆதித்தியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக சாயி இல்லம் இமையாணன் மேற்கு உடுப்பிட்டியில் இன்று 29.03.2025 சனிக்கிழமை வைக்கப்பட்டு நாளை 30.03.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஈமைக்கிரிகைகள் நடைபெற்று வல்லை இந்து பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சாயி இல்லம்,
உடுப்பிட்டி.
076 232 5279

*தகவல் :*
மகள், மகன், மருமக்கள்,
குடும்பத்தினர்

(3777)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



தோற்றம் 25.03.1959

மறைவு 27.02.2025

கடந்த 27.02.2025 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

## அமரர் அருமைத்துரை ஞானேஸ்வரி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று 29.03.2025 சனிக்கிழமை காலை 05.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மதியம் 12.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(C-2563)

நவிண்டில், குஞ்சர்வளவு,
கரணவாய் மத்தி, கரவெட்டி.

*தகவல் :*
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால்

# உருக்குலைந்த மியன்மார்-தாய்லாந்து

- சேதமடைந்த கட்டடங்கள்
- பலர் உயிரிழந்து இருக்கலாம் என அச்சம்

**மியன்மார் மற்றும் தாய்லாந்தில் நேற்று பிற்பகலில் அடுத்தடுத்து 7.7 ரிக்டர் அளவில் மூன்று நிலநடுக்கம் ஏற்பட்டதால் இரு நாடுகளில் உள்ள பல கட்டடங்கள் உருக்குலைந்துள்ளதுடன் ஏற்பட்ட பலத்த நில நடுக்கத்தால் பலர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.**





இந்த நிலநடுக்கத்தின் மையம் மியன்மார் தலைநகரிலிருந்து 250 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சகாய்ங்க் நகரில் சுமார் 16 மற்றும் 18 கிலோ மீற்றர் பரப்பளவுக்கு பரவியிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தை உணர்ந்த மக்கள் கட்டடங்களுக்குள் இருந்து அச்சத்துடன் வெளியேறும் காட்சிகள், வானுயர்ந்த கட்டடம் ஒன்று இடிந்து தரைமட்டமாகி விழுதல் மற்றும் சகாய்ங்க் பகுதியிலிருந்த பழைமையான ஆற்றுப் பாலம் சேதமடைந்திருக்கும் வீடியோ ஒன்றும் வெளியாகியிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த நிலநடுக்கம், பூமிக்கு அடியில் 10 கிலோ மீற்றர் ஆழம் வரை உணரப்பட்டிருந்ததாகவும் இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்புச் சேதங்கள் அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் வடக்கு தாய்லாந்து வரை பரவியிருந்தது. தலைநகர் பாங்கொக்கின் மெட்ரோ, ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

சீனாவிலும் உணரப்பட்டுள்ளது. யுன்னான் மாகாணத்தில் நில அதிர்வு பதிவாகியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (6-8)

# தரமான உணவுகளை

# நியாயமான விலையில் வழங்க

## நாடளாவிய ரீதியில் புதிய உணவகங்கள்

(கொழும்பு)

மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் தரமான, போதியளவான உணவை நியாயமான விலையில் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளைச் செய்துகொடுக்க, நாடளாவிய ரீதியில் புதிய உணவகங்களை நிறுவ அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தேசிய உணவு ஊக்குவிப்பு சபை, சுகாதார அமைச்சு மற்றும் விவசாய அமைச்சுக் களின் அதிகாரிகளின் பங்கு பற்றுதலுடன் இது தொடர்பான ஆரம்பகட்ட கலந்துரையாடல் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றிருந்தது.

தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை, சுகாதார அமைச்சு மற்றும் விவசாய அமைச்சு ஆகியன இணைந்து தற்போது உணவகங்களை நடத்தி வரும் வர்த்தகர்களின் ஆதரவுடன் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆரோக்கியமான உணவுகளை உண்ணும் மக்களின் உரிமையை உறுதிப்படுத்தல், சரியான சுகாதாரத்தரத்திற்கு ஏற்ற உணவை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான சூழலை உருவாக்குதல், நுகர்வோர் நம்பிக்கையை வளர்ப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள், அது தொடர்பில் அரச மற்றும் தனியார் துறைகளின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வது குறித்தும் இதன் போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதன்படி, முதலாவது மாதிரி உணவகம் ஏப்ரல் 1ஆம் திகதி நாரஹேன்பிட்டியில் திறக்கப்படவுள்ளது. இதன் இரண்டாம் கட்டமாக தற்போதுள்ள உணவகங்களின் தரத்தை உயர்த்தும் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. (6-8)

# சுகாதார அமைச்சின் முன் போராட்டத்தில் ஈடுபட்ட

## 27 பேர் கைது



(கொழும்பு)

நீதிமன்ற உத்தரவை மீறி சுகாதார அமைச்சுக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட 27 பேரை நேற்று முன்தினம் இரவு மருதானை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பல கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் மதுஷான் சந்திரஜித் உட்பட 27 மாணவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரச பல்கலைக்கழகங்களில் இருந்து இணை சுகாதார பட்டதாரிகளை உடனடியாக பொதுத்துறையில் சேர்க்கக் கோரி மாணவர்கள் தொடர்ச்சியான போராட்டப் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது பொலிஸ் படைகள் வந்து போராட்டக்காரர்களை வலுக்கட்டாயமாக அந்த இடத்திலிருந்து வெளியேற்றிய போது, குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் டீன்ஸ் வீதி, டி சராம் சாலை, ரீஜண்ட் வீதி மற்றும் தேசிய மருத்துவமனை சதுக்கத்தைச் சுற்றியுள்ள நெடுஞ்சாலை ஆகியவற்றில் நுழையவும், சுகாதார அமைச்சகம் மற்றும் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு இடையூறு விளைவிக்கவும் போராட்டங்கள், அணிவகுப்புகள் மற்றும் சுகாதார அமைச்சகத்திற்கு முன்னால் நிற்கவும் தடை விதிக்கப்பட்டது. (6-8)

# தராதரம் பாராது விசாரணை!

# ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு

(கொழும்பு)

கையூட்டல் பெறுவது தொடர்பில் தற்போது நிலவும் சட்டத்தைக் கடுமையாக்க கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்திற்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கையூட்டல் சம்பவத்துடன் தொடர்புடைய எந்தவொரு நபர் குறித்தும் தராதரம் பாராது விசாரணை ஆரம்பிக்கப்படும் என அந்த ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### படையினர் ...

விடுப்பது நியாயமற்றது. இது மிகவும் ஒழுக்கக்கேடானது என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சமூக ஊடகப் பதிவொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கை ஒரு இனவெறி கொண்ட நாடில்லை, நாம் வேறொருவரின் நிலத்தைக் கைப்பற்றவில்லை, நமது ஆள்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாத்தோம், நமது மக்களை நாம் பட்டினியால் வாடச்செய்யவில்லை, நமது அரசியலமைப்பு அவ்வாறு செய்வதற்கு அனுமதிக்கவில்லை.

இலங்கை நல்லிணக்கப் பாதையைத் தேர்ந்தெடுத்தது,சரணடைந்த 12ஆயிரத்து 197 விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களிற்கு எதிராக நாங்கள் வழக்குத்தாக்கல் செய்யவில்லை,அதற்குப் பதிலாக நாங்கள் அவர்களிற்கு புனர்வாழ்வு அளித்தோம், அவர்களிற்கு இரண்டாவது வாய்ப்பை அளித்தோம், அவர்களை சமூகத்தில் இணைத்தோம்.

மத்திய வங்கிக் குண்டுவெடிப்பிற்குக் காரணமானவர்கள் உட்பட 27விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களிற்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது, நம்பிக்கையை வளர்ப்பதற்காக இதனைச் செய்தோம்.

மூன்று தசாப்தகால மோதல் காரணமாக முழு நாடும் பாதிக்கப்பட்ட போதிலும் வடக்குக்கிழக்கிலேயே மோதல்கள் பிரதானமாக இடம்பெற்றதால் தமிழ்ச்சமூகமே அதிகளவு துயரங்களைச் சந்தித்தது.

யுத்தம் 2009 இல் முடிவிற்கு வந்ததும் இலங்கையர்கள் கூட்டாக நிம்மதிப் பெருமூச்சை விட்டனர். யுத்தம் முடிவிற்கு வந்ததால் நன்மையடைந்தவர்களில் தமிழ் மக்களும் உள்ளனர். வன்முறை இயக்கத்திடமிருந்து விடுதலை செய்யப்பட்ட அவர்களிற்கு தேசிய வாழ்க்கையில் மீண்டும் இணைவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

தமிழர்கள், இன்று சமூக பொருளாதார அடித்தளத்தின் ஒருபகுதியாக உள்ளதுடன், இலங்கையின் அரசியல் அமைப்பின் கீழ் சமமான பாதுகாப்பிற்கு உரித்துடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

போரின் இறுதிக்கட்டங்களில் பெரும் சேதங்கள் ஏற்பட்டதை எவரும் மறுக்கவில்லை, யுத்தம் அதன் இயல்பில் துன்பகரமானது.

ஆனால் உண்மை என்னவென்றால் யுத்தத்தில் சிக்கியிருந்த பொதுமக்களை பாதுகாக்கவும் ஆதரிக்கவும் இலங்கை அரசாங்கம் அயராது உழைத்தது. மோதல் இடம்பெற்ற காலம் முழுவதும் உணவு, மருந்து மற்றும் அத்தியாவசிய சேவைகளை அனுப்பியது.

இதன் காரணமாகவே யுத்தத்தின் இறுதித் தருணங்களில் பொதுமக்கள் தாங்களாகவே இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி ஓடிவந்தனர். இராணுவத்திடமிருந்து ஓடவில்லை என்றார். (ந-7)

### பிரிட்டனின்...

பயணத்தடை குறித்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜகத் ஜயசூரிய, வசந்த கரன்னா கொட ஆகியோர் போர்க்களத்தின் முன் வரிசையில் நின்று போரிட்டவர்கள் அல்லர். பின்வரிசையில் நின்றவர்கள் போர்க்களத்தின் பின்வரிசையில் ஏதேனும் தவறுகள் நிகழ்ந்திருந்தால் அதனை விசாரிக்க வேண்டும்.

நான் இராணுவத் தளபதியாக இருந்த காலத்திலேயே ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்திருந்தேன். நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் இவர்கள் இருவரைப் பற்றி பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் விமர்சித்துள்ளேன்.

அதேபோன்று போர்க்களத்தின் முன்னரங்கில் நின்று போரிட்ட சவேந்திர சில்வா எதுவிதத் தவறும் செய்யவில்லை என்று உறுதிபட என்னால் கூறமுடியும் எனத் தெரிவித்தார். (ந-7)

### பிரிட்டன்...

எனினும் எமது நாட்டின் உள்ளக விடயங்களில் சர்வதேச சக்திகள் தலையிடுவதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். கொழும்பில் அமைந்துள்ள ஜனநாயக இடதுசாரி முன்னணி கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "எமது நாட்டில் பல வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சிவில் யுத்தத்துக்குத் தலைமை தாங்கிய மூன்று படைத்தளபதிகளுக்குப் பிரித்தானியா தடை விதித்திருக்கின்றது. இது சர்வதேசம் தொடர்பான பிரித்தானியாவின் இரட்டை நிலைப்பாட்டையே காட்டுகின்றது.

ஏனெனில் காசாவில், இஸ்ரேல் இராணுவம் அங்கு பாரிய இனப்படுகொலைகளை மேற்கொள்ள அமெரிக்கா உதவி வருகின்ற போது அதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காத பிரித்தானியா, பல வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற சிவில் யுத்தத்துக்குத் தலைமை தாங்கியமைக்காக எமது படைத்தளபதிக்குப் பயணத்தடை விதித்திருக்கின்றது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனப் பிரேரணை கொண்டுவந்தபோது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ், மைத்திரிபால சிறிசேன அதற்கு இடமளிக்காமல், உள்ளகப்பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவதாகத் தெரிவித்திருந்தனர்.

அந்தப் பிரேரணை தற்போதும் செல்லுபடியானதாக இருக்கின்றது. அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் அந்த முயற்சியிலேயே இருந்து வருகின்றன. எமது நாட்டின் உள்ளக விடயங்களில் சர்வதேச சக்திகள் தலையிடுவதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்றார். (ந-7)

### தேர்தல்...

நீதிமன்றம் மனுதாரர்களுக்கு கட்டளையிட்டுள்ளது.

யாழ்.மாநகர சபை உள்ளிட்ட உள்ளூராட்சி சபைகளுக்காகத் தமிழ் மக்கள் கூட்டணியினரால் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை உச்ச நீதிமன்றில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு சட்டமா அதிபர் அலுவலகத்தில் மனுதாரர்களின் சட்டத்தரணிகளுக்கும் இலங்கைத் தேர்தல் திணைக்கள சட்டத்தரணிகளுக்கும் இடையில் கூட்டம்ஒன்றினை ஒழுங்கு செய்து அக் கூட்டத்தில் நிராகரிக்கப்பட்ட மனுக்கள் தொடர்பாக ஒரு இணக்கப்பாட்டுக்கு வருமாறும் அவ்வாறு இணைக்கப்பாட்டுக்கு வராத மனுக்கள் மீதான விசாரணைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுக்கப்படும் என்றும் உச்ச நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது. (ந-7)


## பணிப்பெண் தேவை

எங்கள் இரண்டு குழந்தைகளையும் பராமரிப்பதற்காக நாங்கள் வீட்டுப் பணிப்பெண்ணைத் தேடுகிறோம். அவர் எங்களுடன் வீட்டில் தங்கியிருக்க வேண்டும்.

(976)

**076 695 8498**


## மரண அறிவித்தல்

### செல்வி ஆன் சுமங்கலா குலநாயகம்

(Attorney at Law, M.A. (Human Rights and Democratisation))



*யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சட்டத்தரணி செல்வி ஆன் சுமங்கலா குலநாயகம் கடந்த (26.03.2025) புதன்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.*

அன்னார் சின்னத்துரை - பெல்லா மற்றும் சூசைப்பிள்ளை - மங்களம் தம்பதியர்களின் பேர்த்தியும் சேவியர் குலநாயகம் - தேவஜோதி தம்பதியரின் ஏகபுத்திரியும் யோசெப் தர்மர், ஜேம்ஸ் நிமலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்ரனெற் மினோலினின் மைத்துனியும் பெஞ்சமின் அருமைநாயகம் - புசுஷ்பராணி, விக்ரர் தனிநாயகம் - சுசீலா, லூசியன் ஏபிரகாம் - தேவசக்தி, கிறிஸ்ரி தேவதாசன் - தேவராணி, றோய் மகிழ்ராஜா - தேவநாயகி ஆகியோரின் பெறாமகளும் தேவராஜன் - காந்தி, டனோ தேவகுரு - சிந்தியா, ஜெயராஜா - மேரி ராணி, அன்ரனி ஜெயநாதன் - மேரி அமலோற்பவநாயகி, அருச்சுனா - மேரி நிர்மலா ஆகியோரின் மருமகளும் இளங்கோ (கனடா), சேரன் (கனடா), வாசுகி (கனடா), பிறிட்ஜெட் (அவுஸ்திரேலியா), அஞ்சலா (அவுஸ்திரேலியா), யோசேப் (அவுஸ்திரேலியா), கெனத் (பிரித்தானியா), றோய் (பிரித்தானியா), ஜோன் றுக்மன், டெபோரா றுக்ஷி, பீற்றர் நரேசுஷ் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் நடின் (பிரித்தானியா), டிலன் (பிரித்தானியா), அரன் (பிரித்தானியா), லூக் (பிரித்தானியா), சுபாசினி, தர்மேந்திரா, தனேந்திரா, யுவனேந்திரா (பிரித்தானியா), இளஞ்செழியன், இளஞ்சோழன், காலஞ்சென்ற இளஞ்சேந்தன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 31.03.2025 திங்கட்கிழமை பி.ப.01.30 மணிக்கு இல.36, மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் பி.ப.03.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித செபஸ்தியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

36, மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம். (C-2567)

077 489 6306, 077 883 1444, 077 861 7740




## AUM REIKI CENTRE JAFFNA

ஓம் ரெய்கி சென்ரர் யாழ்ப்பாணம்

Pranic Healing (Reiki) and Yoga (Training & Counselling)



## Reiki Graduate Diploma Course

"பிராணசிகிச்சை" பாடவிளக்கமும், செய்முறை பயிற்சியும்

உடல், உணர்வு(emotion) மனம்(mind), உயிர் சார்ந்த பிரச்சினைகளுக்கான தீர்வுதரும் அற்புத ரேய்கி சக்தி, இலவச ஆலோசனை பெறலாம்.

இடம்: திவ்விய ஜீவன மண்டபம், கல்வியங்காடு.

(3780)

29.03.2025 சனிக்கிழமை தொடக்கம் 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை வரை

சனி.ஞாயிறு : 4.00 pm to 8.00pm
கிழமைநாட்கள்: 6.00 pm to 8.00pm

தொடர்புகளுக்கு: திரு. ஸ்ரீ. நந்தகுமார் Whats App No:+61415405361
திரு. ப.அச்சுதராஜா 0777607026, WP: + 94777607026



## காணி விற்பனைக்கு உண்டு

### உரும்பிராய் வடக்கில் 13½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் ஒரு பரப்பின் விலை 1,500,000 (பதினைந்து இலட்சம் ரூபாய்)
- சரஸ்வதி சனசமூக நிலையம் அருகாமை குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- செம்மண், நன்னீர் ஊற்று நிலப்பரப்பு 20 அடிப் பாதை.
- உரும்பிராய் இந்துக் கல்லூரி 1 Km தூரம்.
- உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோயில் 1½ Km தூரம்.
- தரகர் தேவையில்லை.

(3778)

தொடர்புகளுக்கு

**077 038 5455 / 077 468 3354**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் திரு நெல்வேலி "லிட்டில் மாஸ்ரர்" பாலர் பாடசாலையின் "விளை யாட்டுவிழா" இன்று சனிக் கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் கி.சதீஸ்குமார் தலைமையில் இடம்பெறவுள் ளது.

இந் நிகழ்வில் வடமாகா ணக் கல்வித் திணைக்களம், ஆரம்பப் பிள்ளைப் பருவ அபி விருத்திப் பிரிவின் பணிப்பாளர் நா.கந்ததாசன் பிரதம விருந் தினராகவும், யாழ்.மாவட்ட விளையாட்டுப் பயிற்றுநர் கா.சுதாகரன், யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய உப அதிபர் திருமதி.தே.மைதிலி யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் பி.எம்.ஆர் விமலவீர, நல்லூர் பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் செல்வி ஞா.கஜந்தா, யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலய ஆசிரியை திருமதி. சு.பாலசரஸ்வதி, யா/ இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியை திருமதி வா.செல்வ வேல் ஆகியோர் சிறப்பு விருந் தினரர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (6-8)

## மானியத் திட்டங்களை பெற பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

### வடமாகாண சுகாதார திணைக்களப் பணிப்பாளர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மற்றும் வவு னியா மாவட்டங்களில் இந்த ஆண்டு மாகாண விசேட குறித் தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி யின் கீழ், 50% மானிய அடிப்படை யில் கால்நடைவளர்ப்பு திட்டங் களை முன்னெடுப்பதற்கு வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் தீர் மானித்துள்ளது.

புல் வளர்ப்பு மற்றும் பத னிடல், நல்லின பட்டிக்காளை மற் றும் பட்டிக்கடாக்கள் வழங்குதல், செயற்கை முறைச் சினைப்படுத் தல் கன்றுகளுக்கான ஊக்குவிப்பு பெறல், சிறிய அளவிலான பாற் பண்ணைகளுக்கான கால்நடை தொழுவங்களை கட்டுதல் மற் றும் புதுப்பித்தல், சிறிய நடுத்தர அளவிலான ஆட்டுப்பண்ணைக ளுக்கு நல்லின ஆடுகளை வழங் குதல், உள்ளூர் இன ஆடுகளை இனவிருத்தி செய்யும் முகமாக பொருத்தமான கடா/மறி ஆடு கள், கொட்டகைகள் மற்றும் பயிற் சிகளை வழங்கல், ஆட்டுப்பண் ணையாளர்களுக்கு உயர்த்தப் பட்ட ஆட்டுக்கொட்டகை வழங் கல், தரமான மறி ஆடுகள் வழங் கல், விசேட தேவையுடைய குடும்பங்களுக்கான ஒரு மாத வய துடைய கோழிக்குஞ்சுகள் 25 இனை வழங்குதல், ஒரு மாத குஞ்சு வளர்ப்பதற்கான உபகரணங் கள் மற்றும் உள்ளீடுகள் வழங் கல், வர்த்தக ரீதியான கோழிப் பண் ணைகள் புனர்நிர்மாணம் மற் றும் கட்டுமானம் செய்வ தனை ஊக்குவிக்க உள்ளீடுகள் வழங் கல், மடியழற்சி நோய்க்கட்டுப் பாட்டுக்கான உள்ளீடுகளை வழங் கல், பால்கொள்கலன்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கல், பால் பதனிடல் தொடர்பான உபகர ணங்கள் மற்றும் உள்ளீடுகள் வழங்கல் ஆகிய 14 செயற்றிட்டங் களுக்கே பண்ணையாளர்களிட மிருந்து பதிவுகளுக்கான கோரிக் கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டங்கள் மூலம் பயனடைய விரும்பும் பண்ணை யாளர்கள் தமது பிரதேச கால் நடை வைத்திய அலுவலகங்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண கால்நடை உற் பத்தி சுகாதார திணைக்கள மாகாணப் ப ணிப்பாளர்வைத் தியகலா நிதி எஸ்.வசீகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (6-8)

## காலாவதியான பொருட்கள் விற்பனை செய்த வர்த்தகர்

### ரூ.35,000 தண்டம் விதிப்பு

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு மற்றும் வள் ளிபுனம் பகுதிகளில் காலாவதி யான பொருட்களை விற்பனை செய்த உரிமையாளரிற்கு சுமார் 35, 000 ரூபாய் தண்டம் நீதி மன்றினால் நேற்று விதிக் கப்பட்டுள்ளது. குறித்த பகுதி யில் பழுதடைந்த அரிசியைக் கர்ப்பிணி தாய்மாருக்கு விற் பனை செய்வதாகக் கிடைக் கப்பெற்ற முறைப் பாட்டின் அடிப் படையில் கடந்த 22 ஆம் திகதி வள்ளிபுனம் பொதுச் சுகாதார பரிசோதகர் றொய்ஸ்ரன், விசு வமடு பொது சுகாதாரப் பரிசோத கர் சந்திர மோகன், உடையார் கட்டுப் பொதுச் சுகாதார பரி சோதகர் பிரதாஸ் ஆகியோர் இணைந்து புதுக்குடியிருப்பு மற்றும் வள்ளி புனம்பகுதிகளில் அமைந்துள்ள பிரபல விற்பனை நிலையங்களில் சோதனை நடவடிக்கை ஒன்றினை முன் னெடுத்திருந்தனர். இதன் போது காலாவதி யான 700 கிலோ அரிசி, பிஸ்கட் பைக்கற்றுகள் என்பன கைப்பற்றப்பட்டிருந்தன.

காலாவதிப் பொருட்கள் கைப் பற்றப்பட்ட விற்பனை நிலைய உரிமையாளர்களிற்கு எதிராக நேற்று முல்லைத்தீவு மேல திக நீதவான் நீதிமன்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கள் றொய்ஸ்ரன் மற்றும் சந் திரமோகன் ஆகியோரால் வழக் குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதி மன்றில் விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்பட்டது.

இதன் போது உரிமையா ளர்களைக் குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம் 35,000 ரூபாய் தண்டம் விதித்த துடன் கடுமையான எச்சரிக் கையும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-299)

## கட்டாக்காலி மாடுகளால் பயணிகள் அசௌகரியம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ-9 வீதிகளில் பகலிரவு வேளைகளில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத்தால் பயணிகள் மற்றும் வாகன சாரதிகள் பல்வேறு அசௌகரி யங்களுக்கு உள்ளகியுள்ளதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

ஏ-9 வீதி பரந்தன், பூநகரி மன் னார் பூநகரியூடாக யாழ்ப்பாணம் மற்றும் பரந்தன், முல்லைத்தீவு ஆகிய குறித்த வீதிகளில் கட்டாக்காலி மாடுகள் கூட்டம் கூட்டமாக வீதிகளின் நடுவே நிற்பதால் வாகன நெரிசல் கள் ஏற்படுவதுடன் வீதி விபத்துக்களும் ஏற்படும் நிலையும் ஏற் பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண் டுமென பயணிகள் மற்றும் சாரதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (6-8)


## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர்.

**இந்திரகாந்தன் கிஷாந்தன்**

திதி:29.03.2025

பிறப்பு 06.01.1984

இறப்பு 10.03.2024

ஆண்டொன்று கடந்ததைய்யா
ஆறவில்லை எங்கள் நெஞ்சம்
மீண்டு இங்கு வாருமய்யா-எங்கள்
மீளாத் துயரைத் தீருமய்யா!

வேப்பங்குளம், வவுனியா.

குடும்பத்தினர்.

(356)


## இராசிபலன்

29.03.2025
பங்குனி 15, சனிக்கிழமை
அமாவாசை பிற்பகல் 5.16மணிவரை

உத்தரட்டாதி முன்னிரவு 8.18 மணிவரை
சுபநேரம் 3.13-4.43மணிவரை
இராகுகாலம் 9.13-10.43மணிவரை
அமாவாசை விரதம்

சந்திராஷ்டமம்
மகம், பூரம்

வளவன்

**மேஷம்** — காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், சயன சுகக் குறைவான நாள்.

**ரிஷபம்** — மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும் நாள், செல்வாக்கு மேலோங்கும் நாள், வாகன சுகமுண்டு.

**மிதுனம்** — பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.

**கடகம்** — விட்டுப்போன பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** — ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**கன்னி** — பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கை கூடும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்** — தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், விருந்தினர் வருகையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், உடல் நலன் சீராகும், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** — சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், மகிழ்ச்சி கூடும் நாள், பிறர் உதவியுண்டு.

**தனுசு** — பெற்றோர் மீது பிரி யம் கூடும், எதிர் காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர் கள், சுப காரியப் பேச்சுக்களில் தாராளம் காட்டுவீர்கள்.

**மகரம்** — தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்

**கும்பம்** — பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், எதிர் பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும் ,வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** — திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், புதியவர்களின் நட்பு கிடைக்கும் ,குடும்பத்தினரிடையே முன் கோபத்தைக் குறைப்பது நல்லது.

கடனுக்கு வாங்கி ரொக்கத்திற்கு விற்பவன் அறிவாளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுத்திட்ட நிதியை
# அதிகரிக்க அரசாங்கம்
## புதிய நடைமுறையைக் கொண்டுவரும்



(சாவகச்சேரி)

வீட்டுத்திட்ட நிதியை அதிகரித்து வழங்க அரசாங்கம் புதிய நடைமுறையைக் கொண்டு வரும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தின் போதே இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவிக்கையில் 60 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட தென்மராட்சிப் பிரதேசத்திற்கு 2025 ஆம் ஆண்டு ஒரு மில்லியன் பெறுமதியான 55 வீடுகளும், 0.6 மில்லியன் பெறுமதியான 60வீடுகளுக்குமான ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்நிலையில் 10இலட்சம் வீட்டுத்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் பூர்த்தியடைந்துள்ள போதிலும் 0.6 மில்லியன் ரூபாய் வீட்டுத் திட்டத்திற்கு இதுவரை 7பேர் மாத்திரமே தகுதியாக அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் மேலும் தகுதியுடைய 53 பயனாளிகளை உள்ளீர்க்க முடியும் எனவும் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பிரதேச செயலாளரால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் மற்றும் அர்ச்சுனா ஆகியோரின் வேண்டுகோளிற்கு இணங்க வீட்டுத் திட்டப் பெறுமதியை எதிர்காலத்தில் அதிகரித்து வழங்குவது தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவெடுப்பதென தீர்மானிக்கப்பட்டது. (6-8-30)



வலிவடக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி மாநாடும் கண்காட்சியும் அண்மையில் வலிவடக்கு பிரதேச சபையின் செயலாளர் க.சுதர்ஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறந்த மூத்த பத்திரிகையாளருக்கான விருது கலாபூஷணம் முத்துத்தம்பி வாமதேவன் அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

## இலவச தையல் பயிற்சி நெறி விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவினால் க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) ஆகிய பரீட்சைகளில் இரண்டாவது தடவையும் தோற்றி சித்தியடையாத மாணவிகளுக்கும் விரும்பிய குடும்பப் பெண்களுக்கும் இலவச தையல் பயிற்சி நெறி எதிர்வரும் ஏப்ரல் மாத முதல் வாரத்தில் வழங்கப்படவுள்ளது.

விரும்பியவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 2025. 04.01 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், 1 ஆம் கட்டை, பருத்தித்துறை, வடமராட்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் அறித்துள்ளார். (6-8)

## சூழலின் சமநிலையைப் பேண
## ஆயிரம் நெல்லி மரங்கள் நடுகைத் திட்டம்



(யாழ்ப்பாணம்)

சுற்றுச்சூழலின் சமநிலையை மேம்படுத்த மருத்துவ, பல்பயன்பாடுள்ள ஆயிரம் நெல்லிமரங்கள் நடுகைத் திட்டம் நேற்று முன்தினம் யாழ் மருத்துவ பீட மாணவர் நலநோன்பு வளாகத்தில் இடம்பெற்றது.

சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்தும் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு ஆரோக்கியமான சூழலை வழங்கும் முயற்சியில், யாழ்ப்பாண மருத்துவ சங்கம் மற்றும் இணுவில் மெக்லியாட் மருத்துவமனை இணைந்து 2025 ஆம் ஆண்டு குறித்த பசுமைத் திட்டத்தை தொடங்கியுள்ளது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ஆர். சுரேந்திரகுமாரன், யாழ்.மருத்துவ சங்க உறுப்பினர்கள், மெக்லியாட் மருத்துவமனை நிர்வாகம் மற்றும் ஊழியர்கள், மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (6-8-33)

## 42 ஆயிரம் குரங்குகள் தென்மராட்சியில் அடையாளம்
## கணக்கெடுப்பில் தகவல்

(சாவகச்சேரி)

அறுபது கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ள தென்மராட்சிப் பிரதேசத்தில் 42ஆயிரம் குரங்குகள் காணப்படுவதாக அண்மையில் முன்னெடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் அடிப்படையில் கண்டறியப்பட்டிருப்பதாக தென்மராட்சிப் பிரதேச செயலர் உஷா சுபலிங்கம் தகவல் வெளியிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச மட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தின் போது பொது மக்கள் குரங்குப் பிரச்சினை தொடர்பாக தெரிவித்த நிலையிலேயே பிரதேச செயலர் தென்மராட்சியில் 42 ஆயிரம் குரங்குகள் காணப்படுகின்றன என்ற அதிர்ச்சித் தகவலை வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் குரங்குகளைக் கட்டுப்படுத்த வாயுத் துப்பாக்கி வழங்க அனுமதிக்கப்படுகின்றது. அதற்காக ஒரு மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளதுடன் வாயுத் துப்பாக்கிகளைக் கொள்வனவு செய்து விவசாய அமைப்புக்களிடம் வழங்குவோம் எனத் தெரிவித்திருந்தார். (6-8-30)

## வட்டுக்கோட்டை பத்திரகாளி அம்மன் வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்மனின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் இடம்பெற்று எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும், 12 மணிக்கு இரதோற்சவமும், 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும், 11 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெற்று 12 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் இடம்பெறவுள்ளது. (6-8)

## வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் வருடாந்த அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக் கோட்டை தெக்கணப்பாய் திருவருள் மிகு ஸ்ரீகண்ணகியம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் இடம்பெற்று எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி சனிக் கிழமை சப்பறத்திரு விழாவும், 6 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தேர்த் திருவிழாவும், 7 ஆம் திகதி திங்கட் கிழமை மாலை 4.30 மணிக்கு ஆலய பித்தர் கேணியில் தீர்த்த உற்சவமும், 8 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு வைரவர் பொங்கலும் இடம்பெறவுள்ளது என ஆலயபரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (6-8)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு பூரண நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை ஊரெழு பூரண நிலையத்தில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (6-8)

## தந்தை செல்வாவின் பிறந்த தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு வடமாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தினால் வலிகாமம் பிரதேச செயலகத்தில் நாளை 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் மன்றத் தலைவர் உமாபதி தலைமையில் கண் பரிசோதனை செய்யப்பட்டவர்களுக்கு கண்ணாடி வழங்கல், பதிவு செய்யப்பட்டவர்களுக்கு உலர் உணவு, அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

அத்துடன் சான்றோரான கௌரவ விருந்தினர்கள் 17 பேர் தந்தைசெல்வா விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாலைத் திட்டங்களுக்கான முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு

(கிளிநொச்சி)

பூநகரி, கரைச்சி, கண்டாவளை ஆகிய 3 பிரதேச செயலர் பிரிவுகளின் கீழ் 2 வேறு திட்டங்களில் காற்றாலை மின்திட்டங்கள் முன்னெடுப்பதற்கான திட்ட முன்மொழிவுகள் நிலைபேறு சக்தி அதிகார சபையால் முன்வைக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சரும் ஒருங்கிணைப்புக்குழுத்தலைவருமான இ.சந்திரசேகர் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போதே குறித்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

இவை தொடர்பில் பல்வேறு கருத்தாடல்கள் இடம்பெற்றன. சம்பந்தப்பட்ட கிராம மக்களுடன் கலந்துரையாடி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதியைப்பெற்று அடுத்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது. (6-8)

# அரிகர புத்திர ஐயனார் மஹோற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தாளையடி ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ பெருவிழாவானது எதிர்வரும் ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதின்மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளது.

மஹோற்சவ தினங்களில் 9 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு இரதோற்சவமும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று மாலை கொடியிறக்கமும் நடைபெற்று 12 ஆம் திகதி சனிக்கிழமை மாலை சண்டேஸ்வரர் திருவிழாவும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை பூங்காவன உற்சவமும் இடம்பெறும் என ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (6-8)

# மீள் குடியேறியவர்களின் வீட்டுத்திட்டத்திற்கு அனுமதி

(கிளிநொச்சி)

மீள்குடியேறியவர்களுக்கான வீட்டுத்திட்டத்துக்கான அனுமதி ஒருங்கிணைப்புக்குழுவால் நேற்று வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடற்றொழில் அமைச்சரும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான இ.சந்திரசேகர் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே குறித்த அனுமதி வழங்கப்பட்டது.

அதேவேளை, 0.6 மில்லியன் ரூபா பெறுமதியான வீட்டுக்கு பயனாளிகள் விருப்பம் தெரிவிக்காமையால் அந்த நிதியை, தேசிய வீடமைப்பு அதிகார சபையால் கடந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் உள்ள வீட்டுத் திட்டங்களுக்கு வழங்க அமைச்சுக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக இதன்போது கிளிநொச்சி மாவட்டச் பதில் செயலரால் தெரியப்படுத்தப்பட்டது. (6-8)

# ஒதுக்கப்பட்ட நிதியினை செலவு செய்து முடிக்க வேண்டும்

## கடற்றொழில் அமைச்சர்


(கிளிநொச்சி)

அரசாங்கத்தின் கொள்கையை நடைமுறைப்படுத்த போதுமான நிதி வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந் நிதியில் ஒரு சதமேனும் திருப்பி அனுப்பப்படாமல் இந்த ஆண்டுக்குள்ளேயே செலவு செய்து முடிக்க வேண்டும் என அதிகாரிகளைக் கோருவதாக கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதிக்காக 9 திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. அதில் 7 திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 2 திட்டங்களுக்கும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதியைப்பெற்ற பின்னர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கு சமர்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. (6-8-315)

# ஆஸியில் மே 3 ஆம் திகதி பொதுத் தேர்தல்-பிரதமர் அறிவிப்பு



(கன்பெரா)

அவுஸ்திரேலியாவில் எதிர் வரும் மே 3 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ் நேற்று தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் வாழ்க்கைச் செலவு அழுத்தங்கள், அதிக பணவீக்கம் மற்றும் அதிக வட்டி விகிதங்கள் மற்றும் வீட்டுவசதி மற்றும் வாடகை போன்ற காரணங்களில் மக்கள் விரக்தியடைந்துள்ளனர்.

தேர்தலை நடத்துவதற்கு பிரித்தானிய மன்னர் சார்லஸைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கவர்னர் ஜெனரல் சாம் மோஸ்டினை பிரதமர் அல்பானீஸ் சந்தித்தார்.

இரண்டாவது மூன்று ஆண்டு பதவிக்காலத்தை எதிர் பார்க்கும் பிரதமரின் மத்திய-இடது தொழிலாளர் கட்சி, தற்போது பிரதிநிதிகள் சபையில் உள்ள 151 இடங்களில் 77 இடங்களைக் கொண்டுள்ளது. தற்போதைய அரசாங்கங்களுக்கு பெரும்பான்மை தேவைப்படுகிறது.

அதேவேளை பெரும்பான்மையான வாக்காளர்கள் தற்போதைய பிரதமர் அல்பானீஸ் மீது சந்தேகம் கொண்டிருப்பதை கருத்துக் கணிப்புகள் காட்டுகின்றன. (6-8)


# வருடாந்த கும்பாபிஷேக தினம்



## காலம் 31.03.2025

## தவத்திரு வே.முருகேசு சுவாமி



**அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வருடாந்த கும்பாபிஷேக தினம்**

31.03.2025 திங்கட்கிழமை காலை ஸ்ரீசெல்வச்சந்நிதி வேற்பெருமானுக்கு 1008 சங்காபிஷேகத்துடன் கூடிய சண்முக அர்ச்சனையும் வேற்பெருமானின் வீதி உலாவும் இடம்பெறவுள்ளதால் அத்தினத்தில் இடம்பெறும் பூசை வழிபாட்டில் அன்பர்கள் அடியார்கள் அனைவரும் கலந்து சிறப்பிப்பதோடு சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் அன்னதான செயற்பாட்டில் பங்குபற்றி முருகனது திருவருளையும் குருவருளையும் பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம்.

(3772)

தவத்திரு.வே.முருகேசு சுவாமி அன்பர்கள் சார்பில்
ஆ.அருந்தவசீலன்.

செல்வச் சந்நிதி,
தொண்டைமானாறு.



# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 04<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, சாரதி<br>எதிர்பார்ப்பு: தகுந்த பெண்<br>தொ.இ: B/15268 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 35 உயரம்: 5'5'<br>தகைமை/தொழில்: NDT, Teacher<br>எதிர்பார்ப்பு: ஆசிரியர் அல்லாத உத்தியோகம்<br>தொ.இ: G/13943 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 5<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: BSc, QS<br>எதிர்பார்ப்பு: தகுந்த பெண்<br>தொ.இ: B/15271 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BA Management Assitant<br>எதிர்பார்ப்பு: Engineer, Lecturer, Accountant, Lawyer<br>தொ.இ: G/9917 |
| பிறப்பு: 1998இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>8 இல் செவ் உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: Diploma, PHI<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15274 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 45 1/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA,DO (gov)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/11011 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## மோடியின் அழைப்பின் பிரகாரம் இந்தியா வரவுள்ள ரஷ்ய ஜனாதிபதி



(மாஸ்கோ)

பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இந்தியா வரவிருப்பதாக ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் செர்கேய் லாவ்ரோவ் நேற்று முன்தினம் வியாழக் கிழமை தெரிவித்தார்.

"ரஷ்யா மற்றும் இந்தியா புதிய இருதரப்புச் செயற்றிட் டத்தை நோக்கி" என்ற தலைப்பில் மாஸ்கோவில் உள்ள இந்தியத் தூதரகத் தில் நடைபெற்ற கருத்தரங் கில் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கேய் லாவ் ரோவ் காணொலி வாயி லாக உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அப்போது, இந்தியாவுக்கு வருகை தர வேண்டுமென பிரதமர் மோடி விடுத்த அழைப்பை ரஷ்ய ஜனாதி பதி ஏற்றுக்கொண்டுள் ளார். இப்பயணத்துக்கான முன்னேற்பாடுகள் நடை பெற்று வருகின்றன.

கடந்த ஆண்டு மீண்டும் பதவியேற்ற பிறகு பிரதமர் மோடி ரஷ்யாவுக்கு முதல் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டார். இப்போது நாங்கள் வருகை தரும் நேரம் என்று லாவ்ரோவ் குறிப்பிட்டதாக ரஷ்ய அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. அதேநேரம், ரஷ்ய ஜனாதிப தியின் இந்திய வருகைக் கான திகதி எதுவும் அறி விக்கப்படவில்லை. (6-8)

# நியாயமற்ற வரி...

## அமெரிக்காவுட...

## கனடா பிரதம...



(ஒட்டாவா) —

நமது பொருள... இறுக்கமான பாது... அடிப்படையில் அமெரி... முடிந்துவிட்டது. சமீப... அமெரிக்காவை எதிர்த்... கார்னி தெரிவித்துள்ள...

அமெரிக்காவுக்கு இறக்கு மதி செய்யப்படும் கார் களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்ற அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அறிவிப்பு உலக சந்தையில் வர்த்தகப் போர் ஏற்படும் சூழலை உரு வாக்கி இருக்கிறது. கார் களுக்கு 25 சதவீதம் இறக்குமதி வரி விதிப்பதை கண்டித்து பல அரசியல் தலைவர்கள் கருத்து தெரி வித்தனர்.

இந்த நிலையில், அமெ ரிக்காவுக்கும், கனடா வுக்கும் இடையிலான ஆழமான பொருளாதார, பாதுகாப்பு மற்றும் இராணுவ உறவுகளின் சகாப்தம் முடிவுக்கு வந்துவிட்டதாக கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் வரிகளுக்கு பதில ளிக்கும் விதமாக கனடா பிரதமர் மார்க் கார்னி கூறியதாவது, அமெரிக்காவின் வரிகள் நியாய... வர்த்த... தாகும்... உறவு...

அ... கூட்டா... கள் ... மீட்டெ... அமெரி...

## பிரித்தானிய மன்னர் சார்ள்ஸ் வைத்தியசாலையில் அனுமதி



(லண்டன்)

பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் கண் காணிப்பிற்காக வைத்திய சாலையில் நேற்று முன் தினம் அனுமதிக்கப் பட்டுள்ளார் என பக்கிங் ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது.

புற்றுநோய் சிகிச்சை யுடன் தொடர்புடைய தற்காலிக பக்க விளைவு கள் ஏற்பட்டமையினால் மன்னர் சார்ள்ஸ் வைத் திய சாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதனையடுத்து அவ ரது பொது நிகழ்வுகள் இரத்து செய்யப்பட்டுள் ளன.

கடந்த ஆண்டு ஆரம் பத்தில் தனக்கு ஒரு வகையான புற்றுநோய் இருப்பது கண்டறியப் பட்டதாக அவர் அறிவித்த திலிருந்து, மன்னரின் உடல்நிலை உன்னிப் பாகக் கண்காணிக்கப் பட்டு வருகிறது. 76 வயதான சார்ள்ஸ், சுமார் மூன்று மாதங்கள் பொதுப் பணிகளில் இருந்து விலகி இருந்தார், ஆனால் அரசாங்க ஆவ ணங்களை மதிப்பாய்வு செய்தல் மற்றும் பிரதம ரைச் சந்தித்தல் போன்ற அரசுப் பணிகளைத் தொடர்ந்து செய்து வரு கின்றமை குறிப்பிடத்தக் கது. (6-8)

## துருக்கியில் போராட்டம் தீவிரம் 2 ஆயிரம் பேர் கைது



(இஸ்தான்புல்)

துருக்கியில் ஜனாதிபதி யாக இருந்து வரும் ரெசெப் தையிப் எர்டோகனுக்கு எதிராக கடந்த சில நாட் களாக துருக்கியின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் வலுத்துள்ளது.

துருக்கியின் முக்கிய எதிர்க்கட்சி தலைவரும், அந்நாட்டின் மிகப்பெரிய நகரான இஸ்தான்புல்லின் மேயருமான எக்ரீம் இமாமோத்து மீது ஊழல் குற்றச்சாட்டு கூறப்பட்டது. இது தொடர்பாக அவர் கடந்த 19 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

துருக்கியில் 2028ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கட்சியை எதிர்த்து எக்ரீம் இமாமோத்து போட்டியிடப் போவதாக அறிவித்தார். இந்த அறிவிப்பு வெளியானதும் அவர் கைது செய்யப்பட்டார்.

அரசின் இந்த நடவடிக்கை எதிர்க்கட்சிகள் மத்தியில் கடும் கொந்த... அவர்க... போரா... றனர்.

பொ... புகைகு... இந்தப் ... இடத்தி... வர்கள... சென்ற... வேடம் ... காட்சிக... வலைத... வருகிற...

துரு... போராட்... பேர் ... யப்பட்டு... மீது வ... டுள்ளது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# வரி விதிப்புக்கள்

## வுடனான உறவில் விரிசல்

## தமர் மார்க் கார்னி காட்டம்

ன)

**பொருளாதாரங்களின் ஆழமான ஒருங்கிணைப்பு, பாதுகாப்பு மற்றும் இராணுவ ஒத்துழைப்பின் அமெரிக்காவுடன் நாங்கள் கொண்டிருந்த பழைய உறவு து. சமீபத்திய வரி நடவடிக்கைகளுக்கு எங்கள் பதில் வ எதிர்த்துப் போராடுவது தான் என கனடா பிரதமர் மார்க் த்துள்ளார்.**

நியாயமற்றவை. ஏற்கனவே உள்ள வர்த்தக ஒப்பந்தங்களை மீறுவதாகும். அமெரிக்காவுடனான பழைய உறவு முடிந்துவிட்டது.

அமெரிக்கா இனி நம்பகமான கூட்டாளி இல்லை. பேச்சுவார்த்தைகள் மூலம் சில நம்பிக்கையை மீட்டெடுக்க முடியும். கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான ஆழமான பொருளாதார, பாதுகாப்பு மற்றும் இராணுவ உறவுகளின் சகாப்தம் முடிந்து விட்டது. அமெரிக்க பொருட்களுக்கு ஏப்ரல் 2ஆம் திகதி மேலும் வரி விதிக்கப்படும்.

அமெரிக்கா நம்மை சொந்தமாக்கிக் கொள்ளும் வகையில் பல முயற்சிகள் செய்கிறது. இதை நான் நிராகரிக்கிறேன். அது ஒரு போதும் நடக்காது. சமீபத்திய வரிகளுக்கு எதிராக எங்களது பொருளாதாரத்தை வலுப்படுத்துவோம். வரி விதிப்பை எதிர்த்து போராடுவோம் என தெரிவித்தார். (6-8)

கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. அவர்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொலிஸார் அவர்களை கண்ணீர் புகைகுண்டுகளை வீசி கலைத்தனர். இந்தப் போராட்டத்தின் போது ஒரு இடத்தில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் விரட்டி சென்றனர். அதில் ஒருவர் பொம்மை வேடம் அணிந்து விரட்டினார். இந்த காட்சிகள் அனைத்தும் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

துருக்கியில் நடந்து வரும் போராட்டம் தொடர்பாக 2 ஆயிரம் பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏராளமானவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. (6-8)



# 45 பயணிகளுடன் கடலில் மூழ்கிய நீர்மூழ்கிக்கப்பல்

## 6 பேர் பலி




(கெய்ரோ)

எகிப்தின் செங்கடலில் 45 சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற நீர்மூழ்கிக் கப்பல் கடலில் மூழ்கியதில் 6 பேர் பலியாகினர்.

வடக்கு ஆபிரிக்க நாடான எகிப்தின் செங்கடலில் உள்ள ஹர்கடா கடற்கரையில் சிந்துபாத் என்னும் நீர்மூழ்கிக் கப்பல், 45 சுற்றுலாப் பயணிகளுடன் சென்று கொண்டிருந்தது. துறைமுகம் அருகே செல்லும் போது திடீரென விபத்துக்குள்ளாகி கடலில் மூழ்கியது.

இந்த விபத்தில் 6 பேர் பலியானதாகவும், 9 பேர் காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது வரை 29 பேர் மீட்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் 4 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர். அவர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.


எகிப்திய கடல் படை மற்றும் மீட்பு படைகள் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

தொழில்நுட்ப பழுது அல்லது ஒக்சிஜன் கசிவு காரணமாக கப்பல் மூழ்கியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. சர்வதேச நீர்மூழ்கி மீட்புக் குழுக்கள் உதவிக்கு அழைக்கப்பட்டுள்ளன. (6-8)

# தென்கொரியாவில் காட்டுத்தீ

✦ 27 பேர் உயிரிழப்பு

✦ மீட்புப் பணியில் 4,650 தீயணைப்பு வீரர்கள்



(சியோல்)

தென்கொரியாவின் தெற்கு மற்றும் மத்திய பிராந்தியங்களில் பரவி வரும் காட்டுத்தீயால் 27 பேர் உயிரிழந்ததுடன் சுமார் 300 கட்டட அமைப்புகள் சேதமடைந்தன.

சாஞ்சியோங் மாவட்டத்தில் தொடங்கிய காட்டுத்தீ, தெற்கு மற்றும் மத்திய பிராந்தியத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவி 43,330 ஏக்கர் பரப்பளவை நாசமாக்கியுள்ளது. இதில் 27 பேர் உயிரிழந்தனர்.

அவர்களில் தென் கிழக்கு நகரமான உய்சோங்கில் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் போது விபத்துக்குள்ளான ஹெலிகொப்டரின் விமானியும் அடங்குவார். இது தவிர, காட்டுத்தீ காரணமாக சுமார் 26 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தக் காட்டுத்தீயில் 1,000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த பௌத்த கோயில் உட்பட சுமார் 300 கட்டமைப்புகள் சேதமடைந்தன. தீப் பரவல் காரணமாக 27 ஆயிரம் பேரைப் பாதுகாப்பான பகுதிகளுக்கு வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.


130 ஹெலிகொப்டர்களின் உதவியுடன் சுமார் 4,650 தீயணைப்பு வீரர்கள் மற்றும் பிற மீட்புக் குழுவினர் காட்டுத் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று அதிகாரிகள் கூறினர்

தென்கொரியா சந்தித்துள்ள காட்டுத்தீ சம்பவங்களில் இது மிகவும் மோசமானது என்று கூறப்படுகிறது. (6-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க ஊழியர்களின் 2025 சம்பள அதிகரிப்பு 03



அன்பு ஜவஹர்ஷா

கடந்த இரண்டு நாட்களாக வலம்புரியில் அரசாங்க ஊழியர்களின் சம்பள மாற்றியமைப்புத் தொடர்பாக 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் மிக முக்கியமான தகவல்கள் பிரசுரிக்கப்பட்டு இருந்தது.

இங்கு சுற்றறிக்கையில் உள்ள மேலும் குறித்துக்காட்ட வேண்டிய விடயங்களோடு சாதக, பாதகமான சில விடயங்களையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இலங்கை அரசசேவை வரலாற்றில் 20 மாதகால அடிப்படையில் இப்படியான அடிப்படைச் சம்பள அதிகரிப்பு ஒன்று எப்போதும் வழங்கப்படவில்லை என்பது மிக முக்கியமான விடயமாகும்.



சமூக வலைத்தளங்களில் இடும் இடுகைகளில் இந்த அடிப்படைச் சம்பள அதிகரிப்பின் பெறுமதியை உணராத கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

முன்னைய சம்பளத்துடன் தொங்கலாக இருந்த 5000 ரூபா விசேட படி 2500 ரூபா இடைக்காலப் படி இரண்டு அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்பட்ட பின்னரே ஆரம்ப மட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் ஒரு ஊழியரின் சம்பளம் 20 மாதங்களில் 8,250 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த 8,250 ரூபா அதிகரிப்பையும் 7,500 ரூபாவையும் சேர்த்தே 40,000 என்ற அடிப்படைச் சம்பளம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் 15,750 ரூபா அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்படுவதால் பலவித நன்மைகள் உண்டாகின்றன. ஓய்வூதியம், சொத்துக்கடன், மேலதிக வேலை நேரக்கொடுப்பனவு போன்றவை 50 வீதத்திற்கு மேல் இதனால் அதிகரித்து ஊழியர்களுக்குக் கிடைக்கும். இவை அனைத்தும் 01.01.2027இல் கிடைக்கவுள்ள முழுமையான சம்பள அதிகரிப்புக்கு கணக்குப் பார்ப்பதால் மேலதிகமாக பாரிய பொருளாதார நன்மை உண்டு.

இந்தச் சம்பள அதிகரிப்புத் தொடர்பாக விமர்சனங்களை வைக்கும் எதிர்க்கட்சித் தொழிற்சங்கத் தலைவர்கள் சிறுபிள்ளைகள் போன்று கணித அறிவின்றி ஒரு சில ரூபாய்களே அதிகரிக்கின்றது அல்லது சம்பளம் குறைகின்றது என்ற தவறான கருத்தை எழுத்து மூல ஊடகங்களிலும் தொலைக்காட்சி வாதங்களிலும் முன்வைத்து வருகின்றனர்.

**அட்டவணை - 1**

| சம்பள மாற்றம் | ஆண்டு சம்பள ஏற்றம் | ஆண்டு சம்பள ஏற்றம் | சரி செய்யும் படி |
|---|---|---|---|
| | இ.ஆ.சே 1 | இ.அ.சே 3 | |
| 01.01.2022 | 1,630.00 | 930.00 | 700.00 |
| 01.01.2025 | 2,940.00 | 1,670.00 | 1,270.00 |
| | | | |
| | இ.ஆ.சே 2-1 | இ.அ.சே 3 | |
| 01.01.2022 | 1,335.00 | 930.00 | 405.00 |
| 01.01.2025 | 2,400.00 | 1,670.00 | 730.00 |
| | | | |
| | இ.ஆ.சே 1 | இ.ஆ.ஆ.சே 2 | |
| 01.01.2022 | 1,630.00 | 1,335.00 | 295.00 |
| 01.01.2025 | 2,940.00 | 2,400.00 | 540.00 |
| | | | |
| | இ.ஆ.சே 1 | இ.ஆ.ஆ.சே 1 | |
| 01.01.2022 | 1,630.00 | 1,400.00 | 230.00 |
| 01.01.2025 | 2,940.00 | 2,520.00 | 420.00 |

இந்தக் குறிப்பிடத்தக்க அடிப்படைச் சம்பள அதிகரிப்பை வியாபாரமாக்க அரச தரப்பில் ஒரு சிலரால் மட்டுமே முடிகின்றது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச் வரை வழங்க வேண்டிய 5000 ரூபா படியை இந்த அரசாங்கமே நிதி ஒதுக்கி பழைய சுற்றறிக்கைப்படி வழங்கி வந்தது. எந்தவகையிலும் ஏப்ரல் சம்பளத்திற்கு உரித்தாக இந்த 5000 ரூபாவை ஏப்ரல் சம்பளத்துடன் சேர்த்து கணக்குப் பார்த்து எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் குருட்டுக் கணக்குக் காட்டுகின்றனர்.

இந்த 8,250 ரூபாவில் 01.04.2025 முதல் கிடைக்கும் தொகை 5,875 ரூபாவாகும். மிகுதியே 01.01.2026 அன்றும் 01.01.2027 அன்றும் கிடைக்கும். கடந்த ஐந்து வருட காலமாக பெரும் தொகையான ஆரம்பமட்ட அரச ஊழியர் நியமனங்கள் வழங்கப்படவில்லை. ஆகையால் இப்போது சேவையில் உள்ளவர்கள் இதைவிட சில ஆயிரம் ரூபா அதிகம் சம்பளத்தையே பெறுகின்றார்கள்.

இதுபோலவே அரசாங்க சேவையின் சிரேஷ்ட அதிகாரியான அமைச்சுக்களின் செயலாளரின் ஆரம்ப நிலை சம்பளம் 68,850 ரூபாவால் அதிகரிக்கின்றது. இச்சேவையில் சேவைக்காலம் கூடியவர்களே இருப்பதால் ஒரு இலட்சத்திற்கு மேல் அதிகரிப்பு கிடைக்கவுள்ளது.

அடுத்து விதவைகள், அநாதைகள் ஓய்வுதியத்திற்கு அறவிடப்படும் 8 வீதம் தொடர்பாக பாரிய விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. உண்மையில் கடந்த அரசாங்கத்தால் 03/2024 ஆம் இலக்கச் சுற்றறிக்கைப்படி 2025.04.01 முதலே இது 8 வீதமாக அதிகரிக்கப்பட்டது. மேலதிகமாக 10,500 ரூபா சம்பள அதிகரிப்பைப் பெறும் ஒரு ஊழியர், வெறும் 800 ரூபாவையே இதற்காகச் செலுத்துவார். இது அதை ஊழியருக்கு ஓய்வூதியம் வழங்க அரசாங்கம் அறவிடுவதில்லை. அவரின் மறைவிற்குப் பின்னர் அவரது கணக்கிலோ அல்லது அவரது துணைவிக்கோ அல்லது அநாதைப் பிள்ளைகளுக்கோ ஓய்வூதியம் வழங்கவே இந்த நிதி அறவிடப்படுகின்றது. அப்படி யாரும் இல்லாவிட்டால் 2 வீத தொடர் வட்டியுடன் அந்த நிதியை மீளப்பெறலாம். இது ஒரு வகையில் சேமிப்பாகும். ஆகவே எட்டு வீத அறவீடு என்ற குற்றச்சாட்டு அர்த்தமற்றதாகும்.

சகல தகவல்களிலும் ஆரம்ப அடிப்படை சம்பளமே எடுத்துக்காட்டாக காட்டப்படுகின்றது. ஆனால் இந்த ஆண்டு புதிய நியமனம் பெறுகின்றவர்களைத் தவிர மற்றயவர்கள் சகலரும் 5,10,15 படி நிலைகளைக் கடந்தவர்கள் ஆவார்கள். ஆகவே சம்பள அதிகரிப்பு இன்னும் அதிகமாகும். இதற்கு பிரதான காரணம் வருடாந்த சம்பள ஏற்றமானது 80 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளமையேயாகும். ஆரம்பமட்ட அரசாங்க ஊழியர் 2024.12.31இல் 250 ரூபா வருடாந்த சம்பள அதிகரிப்பையே பெற்று வந்தார். இப்போது இது 450 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுபோல சிரேஷ்ட அதிகாரியின் வருடாந்த சம்பள ஏற்றம் 2,975 ரூபாவில் இருந்து 5,300 ரூபா வரை அதிகரிக்கப்படவுள்ளது. இது தான் சேவைக்காலம் கூடிய அரசாங்க ஊழியர்கள் அதிக சம்பள அதிகரிப்பைப் பெற பிரதான காரணமாகும். அடுத்த விடயம் இந்த சுற்றறிக்கையில் 3.12இல் உள்ள விடயமாகும். இதைப் பற்றியும் விளக்க வேண்டியுள்ளது.

3.12 சகல நடவடிக்கைகளின் பொருட்டு சம்பளத்தின் பகுதியாகக் கருதி எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு தனிப்பட்ட ரீதியாக சரி செய்யும் படிகள் செலுத்தப்படுமேயானால் அச்சரி செய்யும் படியை இச்சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் படி சம்பளத்தினை தீர்மானிக்கும்போது ஏற்புடைய தாக்கிக் கொள்ளலாகாது.

2016.02.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் 4.3 பிரிவின்படி எவரேதும் உதவி உத்தியோகத்தரொருவரின் பொருட்டு செலுத்தப்பட்டு சரி செய்யும் அவ் ஏற்பாடுகளின் படி மேலும் செலுத்துதல் வேண்டும்.

கடந்த 15 ஆண்டுகளின் இந்த சிக்கலால் பாதிக்கப்பட்டவர்கள் இலங்கை ஆசிரியர் சேவையின் முதலாம் வகுப்பில் இருந்து இலங்கை அதிபர் சேவை மூன்றாம் வகுப்புக்கு நியமனம் பெற்ற சுமார் 14,500 அதிபர்கள் ஆவார்கள். இந்தப் பொருத்தப்படி அல்லது சீராக்கல் படிமுறையாக கிரமமாக வழங்கப்படாமை காரணமாக இவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதே இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்ட முதனாவது வகுப்பு ஆசிரியர்களும் வருடாந்த சம்பள ஏற்றப் பெறுமதி குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோதமாக பனைமரங்கள் அழிப்பு
# எதிராக சட்டநடவடிக்கை

(சாவகச்சேரி)

பளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சிப் பகுதியில் நூற்றுக்கணக்கான பனை மரங்களை எந்தவொரு அனுமதியும் இன்றி பிடுங்கி அழித்தவர்கள் மீது பனை அபிவிருத்திச்சபை சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆலயக் காணி ஒன்றில் காணப்பட்ட பனை மரங்களே இவ்வாறு அனுமதி இன்றி சட்டவிரோதமாக அழிக்கப்பட்ட நிலையில் அது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் நேற்று முன்தினம் பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில்,

இயக்கச்சிப் பகுதியில் அதிகளவான பனை மரங்கள் எந்தவொரு அனுமதியும் இன்றி தன்னிச்சையாக அழிக்கப்பட்டுள்ளது. இது மிக மோசமான செயற்பாடு. இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பனை வளத்தை அழிப்பவர்கள் யாராக இருந்தாலும் இரக்கம் காட்டப்பட மாட்டாது. அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என தெரிவித்திருந்தார். (6-8-30)

## குளிர்பானம் வாங்கிய நபருக்கு
# காத்திருந்த பேரதிர்ச்சி

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதி விற்பனை நிலையம் ஒன்றில் நபர் ஒருவர் குளிர்பானமொன்றினை (Pepsi) கொள்வனவு செய்த போது அதனுள் மண்ணெண்ணை மணம் இருப்பதாக முறைப்பாடு வழங்கப்பட்ட அதிர்ச்சிச் சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றில் இருந்து நபர் ஒருவர் வீட்டு வேலையாட்களுக்காக குளிர்பானம் ஒன்றினை கொள்வனவு செய்துள்ளார்.

இந்நிலையில் வீட்டு வேலையாட்கள் குறித்த குளிர்பானத்தினை குடித்த போது அதிலிருந்து மண்ணெ ண்ணை மணம் வந்துள்ளது. அதனையடுத்து புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார சேவை பணிமனைக்கு நேரில் சென்று குறித்த சம்பவம் தொடர்பாக முறைப்பாடு வழங்கியிருந்தார்.

அதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார சேவை பணிமனை பரிசோதகர்கள் குறித்த விற்பனை நிலையத்தினை சோதனை செய்து கலப்படம் இருப்பதாக சந்தேகிக்கப்படும் குளிர்பானத்தினை கைப்பற்றியுள்ளனர்.

மேலும் குறித்த குளிர்பானத்தின் மாதிரி, பரிசோதனைக்கு அனுப்பப்படவுள்ளதுடன் குறித்த குளிர்பானத்தை விற்பனை செய்த விற்பனையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் பதிவு செய்யப்பட்டுள்ளது. (6-8-299)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 350 | 250 | 350-400 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 400 | 400-450 | 400 |
| தக்காளி | 200 | 120 | 200 | 140-170 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 200-230 | 200 |
| கோவா | 300 | 250 | 250 | 250 | 400 |
| கரட் | 750 | 750 | 800 | 750 | 800 |
| பூசணி | 160 | 160 | 150 | 100-130 | 200 |
| புடோல் | 150 | 250 | 150-200 | 150 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 60-80 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 100-300 | 300 | 100-220 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 160 | 145 | 200 |
| பாகற்காய் | 400 | 450 | 500 | 550-600 | 500 |
| வெண்டக்காய் | 250 | 350 | 200 | 250-300 | 400 |
| கருணைக் கிழங்கு | 160 | 260 | 200 | 150 | 240 |
| பயற்றங்காய் | 200 | 250 | 300 | 300-350 | 350 |
| லீக்ஸ் | 350 | 300 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 160 | 200 | 250 | 150 | 300 |
| கறிமிளகாய் | 850 | 500 | 450 | 550-600 | 500 |
| முருங்கைக்காய் | 2000 | 3000 | 2000 | 1200-1800 | 3000 |
| போஞ்சி | 400 | 500 | 500 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 300 | 250 | -- | 380 |
| கீரை - 1 பிடி | 100 | 150 | 150 | 60-80 | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 150-200 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 150 | 150-240 | 200-240 |
| இராசவள்ளி | 650 | 450 | 500 | 400 | 600 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 200 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 60 | 80 | 50 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 60 | 100 | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3319

அனுஷ்கா




ரித்திகா




சர்ஜன்




இமாத்




அஸ்விந்




உஷாந்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 734





அவள் பொன்னியின் செல்வருக்குத் தன் உள்ளத்தைப் பறிகொடுத்திருக்கிறாள். பொன்னியின் செல்வர் அவளை ஏற்றுக்கொள்ளா விட்டால், அவள் என்ன செய்வாள்? நிச்சயமாகப் பொன்னியின் செல்வருக்கு விஷம் வைத்துக் கொல்ல முயல்வாள். அவருடைய மனதை வேறு எந்தப் பெண்ணாவது கவர்ந்து விட்டதாக அறிந்தால் அவளையும் கொல்ல முயல்வாள்."

"ஒரு நாளும் நான் அப்படி நினைக்கவில்லை பூங்குழலி சாத்வீகமே உருக்கொண்ட வானதி அப்படி ஒருநாளும் செய்ய முயல மாட்டாள்."

"இருக்கலாம் நானாயிருந்தால் அப்படித் தான் செய்ய முயலுவேன்." "உன்னைக் கடவுள் மன்னித்துக் காப்பாற்ற நான் பிரார்த்தித்து வருவேன்."

"கடவுள் என்ன என்னை மன்னிப்பது! நான் கடவுளை மன்னிக்க வேண்டும்!" "நீ தெய்வ அபசாரம் செய்வதையும் கடவுள் மன்னிப்பார்!" "அமுதா! நீ உத்தமன், என் பெரிய அத்தையின் குணத்தைக் கொண்டு பிறந்திருக்கிறாய்"

"அது என்ன விடயம்? திடீரென்று புதிதாக ஏதோ சொல்கிறாயே?" "என் பெரிய அத்தை இறந்துபோய் விட்டதாக நம் குடும்பத்தார் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா?"

"யாரைச் சொல்கிறாய்? என் தாய்க்கும், உன் தந்தைக்கும் உடன் பிறந்த மூத்த சகோதரியைத் தானே". "ஆம்! அவள் உண்மையில் இறந்துவிடவில்லை." "நானும் அப்படித்தான் பராபரியாகக் கேள்விப்பட்டேன்."

"அவள் இலங்கைத் தீவில் இன்றைக்கும் பைத்தியக்காரியைப் போல அலைந்து கொண்டிருக்கிறாள்." "குடும்பச் சாபக் கேட்டுக்கு யார் என்ன செய்ய முடியும்?"

"அவள் இன்று பைத்தியக் காரியைப் போல் அலைவதற்குக் குடும்பச் சாபம் மட்டும் காரணம் அல்ல. சோழகுலத்தைச் சேர்ந்த ஒருவனின் நம்பிக்கைத் துரோகம்தான் அதற்குக் காரணம்." "என்ன? என்ன?"

"இளம்பிராயத்தில், என் அத்தை இலங்கைக்கு அருகில் ஒரு தீவில் வசித்து வந்தாள். அவளைச் சோழ ராஜகுமாரன் ஒருவன் காதலிப்பதாகப் பாசாங்கு செய்தான், அவள் நம்பிவிட்டாள். பிறகு அந்த இராஜகுமாரன் இளவரசுப் பட்டம் சூட்டிக் கொண்டதும் அவளை நிராகரித்துவிட்டான்." "இதெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது, பூங்குழலி?"

"என் ஊமை அத்தையின் சமிக்ஞை பாஷை மூலமாகவே தெரிந்து கொண்டேன். இன்னொன்று சொல்கிறேன் கேள்! சில காலத்துக்கு முன்பு பாண்டிய நாட்டார் சிலர் இங்கே வந்திருந்தார்கள். என் அத்தையை வஞ்சித்த இராஜ குலத்தினரை பழிக்குப் பழி வாங்குவதற்கு என் உதவியைக் கோரினார்கள். அப்போதுதான் என் அத்தையின் கதையை அறிந்திருந்த எனக்கு இரத்தம் கொதித்துக் கொண்டிருந்தது. அவர்களுடன் சேருவதென்றே முடிவு செய்துவிட்டேன்.

அச்சமயம் என் பெரிய அத்தையின் மனப்போக்கை அறிந்து கொண்டேன். அவள், தனக்குத் துரோகம் செய்தவனை மன்னித்ததுமில்லாமல், அவனுக்கு இன்னொரு மனைவி மூலம் பிறந்த பிள்ளையைப் பல தடவை காப்பாற்றினாள் என்று அறிந்தேன். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நான் ஒரு மருத்துவரானால்



நான் வைத்தியரானால் ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடு இல்லாமல் பணியாற்றுவேன். நான் ஏழை மக்களுக்கு நல்ல மருத்துவத்தை வழங்குவேன். எனது கடமையை சிரித்த முகத்துடன் நேர்மையுடனும், பொறுப்புடனும் செயற்படுவேன். ஏழை மக்களுக்கு நான் மருத்துவரானால் முதலில் ஒரு அரசாங்க மருத்துவமனையில் பணிபுரிவேன்.

பள்ளிகளுக்கு மாதந்தோறும் இலவச மருத்துவப் பரிசோதனையை வழங்குவேன். நோயாளர் மீது மிகுந்த கருணைகாட்டுவேன். நான் எல்லா நோயாளர்களுக்கும் நல்ல சிகிச்சை வழங்கி நாட்டிற்குப் பெருமை சேர்ப்பேன். என்னை ஒரு நல்ல வைத்தியர் எனப் பேசும் வகையில் நல்ல மருத்துவத்தை வழங்குவேன்.

நான் உடல் நலம் குறைபாடுடைய மாணவர்களுக்கு இலவச சிகிச்சை அளிப்பேன். என்னை ஒரு கடவுளுக்குச் சமம் என்று பேசும் வகையில் நான் ஒரு நல்ல சிகிச்சை அளிப்பேன். எல்லா மருத்துவர்களும் நல்ல சிகிச்சை அளித்து உயிரைக் காப்பாற்றுவதுபோல் நானும் எல்லா மக்களுக்கும் நல்ல சிகிச்சையளிப்பேன்.

எல்லோரும் போற்றும் வகையில் நல்ல மருத்துவராய் நான் இருப்பேன் மருத்துவர்கள் எவ்வளவு சிகிச்சை அளிக்கிறார்களோ அது போல நானும் சிகிச்சை அளிப்பேன். என்ன நோய்கள் வந்தாலும் அதற்குரிய மருந்தைக் கண்டு பிடிக்கும் மருத்துவராக நடந்து கொள்வேன்.

பணக்கார மக்களுக்கு வைத்தியர்கள் அதிக பணம் வாங்குவது போல நான் மருத்துவரானால் சிறிதளவு பணம் வாங்குவேன். நான் ஒரு நல்ல மருத்துவராகப் பணியாற்றுவேன்.

நான் புதிய புதிய மருந்துகளை கண்டுபிடித்து நோயாளர்களை குணப்படுத்துவேன். நான் எல்லோருக்கும் நல்ல சிகிச்சையினை இலவசமாக அளிப்பேன். நோயாளர்களோடு நல்ல குணத்தோடும் அன்புடனும் செயற்படுவேன் என்று கூறுகின்றேன்.

ஆர். சதுர்சிகா,
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் வழிப்படி காரியங்கள் செய்யும் அழகிய வாழ்க்கை வாழுங்கள்.

– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாணவப் பருவத்தில் ஒழுக்கத்தைப் போதியுங்கள்

தனது சிறுபராயத்தில் அரிச்சந்திரன் மயான காண்டம் நாடகத்தைப் பார்த்த காந்தியடிகள் இனிமேல் நான் பொய் பேசுவதில்லை எனச் சத்தியம் செய்தார்.

ஆக, வாய்மை பேசுவது என்ற அரிச்சந்திரன் வரலாறு நாடகமாகி பொது வெளிக்கு வந்த போது, அந்த நாடகம் காந்தியடிகள் எனும் மகாத்மாவை இவ்வுலகத்துக்குத் தந்தது.

இதுபோல பல உதாரணங்களைக் கூறமுடியும். ஆம் பாடப் புத்தகங்களால் மட்டும் ஒழுக்கமான மாணவர் சமூகத்தை உருவாக்கிவிட முடியாது.

அதேநேரம் கல்வியில் சிறந்து விளங்குவதென்பது ஒழுக்கத்தில் சிறந்து விளங்குவதைக் குறிக்காதென்பதும் இங்கு கவனத்திற்குரியது.

அதனாலேயே

*அரம் போலும் கூர்மை ரேனும் மரம்போல்வர்*
*மக்கட்பண்பு இல்லா தவர்கள்*

என வள்ளுவன் கூறிவைத்தான்.

எனினும் இன்றைய சமூகம் பாடப் புத்தகங்களையும் கற்றல் பெறுபேறுகளையுமே உயர்ந்த பெறுமானமாகக் கருதுகின்றது.

உண்மையில் பாடப்புத்தகங்களை மட்டும் கற்பதாக இருந்தால், அதற்குப் பாடசாலைகள் தேவையற்றவை. தனியார் கல்வி நிறுவனங்கள் மட்டும் போதுமானவை.

ஆக, எவ்வளவுதான் நாம் கற்றறிந்தாலும் ஒழுக்கம், பண்புடைமை, இரக்கம், ஈகை, பணிவு, அன்புடைமை, வாய்மை, அறம் எனும் இன்னோரன்ன விழுமியங்கள் மாணவப் பருவத்தில் போதிக்கப்பட வேண்டும்.

இதற்காகவே பாடசாலைகளில் சமயக் கல்வியும் சமய நிகழ்வுகளும் இறைவழிபாடும் முதன்மைப்படுத்தப்படுகின்றன.

இதற்கும் மேலாக, பெரியவர்களிடம் ஆசி பெறுவது, அதிபர் – ஆசிரியர்களை மதிப்பது, இலக்கிய நிகழ்வுகளை நடத்துவது, இயல் – இசை – நாடகம் எனும் முத்தமிழ் சார்ந்த நிகழ்வுகளில் மாணவர்கள் பங்கேற்பது, அறிஞர் பெருமக்களின் உரைகளை ஏற்பாடு செய்வது, ஆன்மீகம் சார்ந்தவர்களின் அருளுரைகளை மாணவர்கள் செவிமடுப்பதற்கு வழி செய்வது என்பன மாணவர்களை ஒழுக்கசீலராய் ஆக்குவதற்கான ஏற்பாடுகளாகும்.

எனினும் சமகாலத்தில் ஏட்டுக்கல்வி மட்டுமே கவனத்துக்குரியதாகிவிட, மாணவர்கள் பாதை மாறிப் பயணிக்கின்ற மிக மோசமான சூழலுக்கு ஆளாகின்றனர்.

உண்மை. க.பொ.த சாதாரண தரப் பரீட்சை (2024) நடந்து முடிந்த இறுதி நாள், மாணவர்களில் ஒரு பகுதியினர் தமது வெள்ளை ஆடைகளில் மையைத் தெளித்து மிக மோசமாக நடந்து கொண்டனர்.

உண்மையில் பாடசாலைகளில் மாணவர்களுக்கு அறத்தை, ஜீவகாருண்யத்தை, மற்றவர்களுக்கு உதவுகின்ற பண்பை போதித்திருந்தால் தனது பாடசாலைச் சீருடை இன்னொரு ஏழை மாணவனுக்குப் பயன்படுவதாக இருக்க வேண்டும் என்ற சிந்தனையே மேலோங்கி இருக்கும்.

அந்தச் சிந்தனை மேலோங்கி இருந்தால், மை தெளிப்பதற்கு இடம் ஏது?

ஆக, மாணவப் பருவத்தில் எங்கள் பிள்ளைகளை அறத்தின் வழியில் – ஒழுக்கமுடையவர்களாக வழிப்படுத்த வேண்டும். இதுவே இன்றைய தேவை.

# மாகாணசபை விவகாரம் தொடர்பில் பாரதப் பிரதமரிடம் எடுத்துரைப்போம்

### தமிழரசுக்கட்சி தெரிவிப்பு

மாகாண சபைகளின் அதிகாரங்கள் தொடர்ச்சியாக ஒடுக்கப்படுகின்றமை தொடர்பில் பாரதப்பிரதமர் நரேந்திர மோடியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் எனத் தமிழரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

பிரதமர் மோடி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையிலேயே தமிழரசுக் கட்சி குறித்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இது குறித்து அக் கட்சியின் பதில் தலைவர் சிவஞானம் நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது,

இந்தியப் பிரதமர் மோடியின் இலங்கை விஜயத்தின்போது நாம் அவரை சந்தித்துக் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம்.

அந்தச் சந்திப்பில் முக்கியமாக இப்போதிருக்கக்கூடிய மாகாண சபை முறைமை தொடர்பாக அதில் இருக்கும் அதிகாரங்கள் படிப்படியாக பறிக்கப்பட்டுவருவது தொடர்பாகவும் அதனுடன் இணைந்த பல விடயங்கள் தொடர்பாகவும் அவரின் கவனத்திற்குக் கொண்டு செல்லவுள்ளோம்.

அதேவேளை எங்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு தேசிய ரீதியான தீர்வுக்கான முன்மொழிவை பிரதமர் மோடி அவர்கள் தற்போதைய அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றோம் என்றார். (ந-7)

### வடக்கு - கிழக்கில் ரணில் அரசு

# ஆரம்பித்த சோலார் திட்டத்தை தே.ம.சக்தி புறக்கணிக்கிறது

### முன்னாள் பிரதி அமைச்சர் இந்திக குற்றச்சாட்டு

*(கொழும்பு)*

வடக்கு - கிழக்கினை மையப்படுத்திய கூரைக்கு மேல் நிர்மாணிக்கப்படும் 'சோலார்' தொகுதிக்காக வழங்கப்படும் கட்டணத்தை குறைப்பதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானத்தின் ஊடாக, அடுத்த வருடத்தில் பாரிய எரிசக்தி நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என்று முன்னாள் மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் நுகர்வோருக்கு வழங்க வேண்டிய கட்டணத்தை நூற்றுக்கு 15 சதவீதத்தினால் குறைத்துள்ளது. இதனால் ஒரு அலகுக்கான கட்டணம் 19 ரூபாவினால் குறைந்துள்ளது.

சூரிய சக்தியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதற்காக கடந்த அரசாங்கம் கூரைக்கு மேலான 'சோலார்' தொகுதியில் இருந்து உற்பத்தி செய்யப்படும் ஒரு மின் அலகுக்கு 27 ரூபாயை கட்டணமாக செலுத்தியது. இதனால் கூரைக்கு மேலான 'சோலார்' தொகுதியை நிர்மாணிப்பதில் மக்கள் ஆர்வம் காண்பித்தனர்.

சிறிய கூரை சூரிய மின் உற்பத்தி தொகுதிகளை பொதுமக்களிடையே பிரபலப்படுத்துவதன் மூலம் அந்நிய செலாவணி அல்லது டொலர்களை மிச்சப்படுத்த முந்தைய அரசாங்கம் நம்பியது. மின்சக்தி அமைச்சராக கஞ்சனா விஜேசேகர 2022 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட பிறகு 2024 ஆம் ஆண்டுக்குள் மின்சார உற்பத்தி நாற்பத்தைந்து மெகாவோட்டாக அதிகரித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

### மதுபோதையில் சாரத்தியம்

# சாரதி உரிமத்தை தடைசெய்தது மன்று

*(பாணந்துறை)*

மதுபோதையில் பயணிகளை பேருந்தில் ஏற்றிச் சென்ற சாரதியின் சாரதி உரிமத்தை வாழ்நாள் முழுவதும் இரத்துச் செய்ய உத்தரவிட்ட பாணந்துறை நீதவான் சம்பிகா ராஜபக்ஷ சாரதிக்கு 40 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதித்துள்ளார்.

தனியார் நிறுவன ஊழியர்கள் குழுவை ஏற்றிக்கொண்டு பாணந்துறையிலிருந்து களுத்துறை நோக்கிப் பயணித்த பேருந்து பாணந்துறை நல்லுருவப் பகுதியில் நிறுத்தப்பட்டு சோதனை செய்யப்பட்ட போது சாரதி மதுபோதையில் இருந்தமையை பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

இதனையடுத்து பயணிகளின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்க முற்பட்டமை, போதையில் வாகனம் செலுத்தியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் நீதிமன்றில் சாரதியை பொலிஸார் முற்படுத்தினர்.

அதனையடுத்து வழக்கினை விசாரித்த நீதவான் சாரதியைக் கடுமையாக எச்சரித்த பின் சாரதி அனுமதிப் பத்திரத்தை வாழ் நாள் பூராக தடை செய்ததுடன் 40 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதித்தார். (ந-7)

### யாழ்ப்பாணத்தில்

# வரலாற்றுக் கண்காட்சி

*(யாழ்ப்பாணம்)*

யாழ். மாகாண திருக்குடும்ப சபையின் ஏற்பாட்டில் அப்போஸ்தலிக்க துறவிகள்,தியான யோக துறவிகள், திருமடசார்பற்ற சகோதரிகள், துணைக்குருக்கள், திருக்குடும்ப பொது நிலையினர், பெற்றோர், இளையோர், சிறார்கள் ஆகியோரை உள்ளடக்கிய வரலாற்றுக் கண்காட்சி பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருக்குடும்ப கன்னியர்மட பாலர் பாடசாலையில் இன்று (29) சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருள் திரு.ப. யோ.ஜெபரட்ணம் அடிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ந-7)

# வடமராட்சி கிழக்கு அபிவிருத்திக்குழு கூட்டத்தை மறந்த யாழ். எம்.பிக்கள்

### பிரதேச மக்கள் கடும் விசனம்

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற வடமராட்சி கிழக்கு பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும்வருகை தரவில்லை என மக்கள் தமது கவலையை வெளியிட்டுள்ளனர்.

குறித்த அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் மக்களுக்காக குரல் கொடுக்க ஒரு பிரதிநிதிகூட இல்லாமல் மக்கள் தமது விடயங்களை தாங்களாகவே முன்வைத்தனர்.

அதற்குப்பிரதேச அபிவிருத்திக்குழுத் தலைவர் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் அவரே முடிவு எடுத்ததாகவும் சில முடிவுகள் மக்கள் நலன் சாராததாகவும் இருந்தது என மக்கள் தமது விசனத்தை தெரிவிக்கின்றனர்

தேர்தல் காலங்களில் போட்டி போட்டு தினம் தினம் வரும் பிரதிநிதிகள் தமது வாக்கு வங்கிகளை நிரப்பி விட்டு மக்கள் பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தி என வரும் போது கண்டும் காணாமலும் போவது ஏன் என அப்பிரதேச மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் (29.03.2025-03.06.2027)



29.03.2025 அன்று சனி பகவான் கும்ப இராசியில் இருந்து மீன இராசிக்கு மாறுகிறார். மீன இராசிக்கு வரும் சனி பகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை வருட காலத்துக்கு இந்த இராசியில் சஞ்சாரம் செய்து

## அன்பும் அனுகுமுறையும் கொண்ட கும்ப இராசி நேயர்களே!

அருளாசி வழங்குவார். மீன ராசியில் இருந்து தனது மூன்றாம் பார்வையால் ரிஷப இராசியையும், ஏழாம் பார்வையால் கன்னி இராசியையும், பத்தாம் பார்வையால் தனுசு இராசியையும் பார்க்கிறார்.

**கும்பம்:** எதிலும் மனசாட்சிக்கு விரோதமான காரியத்தை செய்யாத கும்ப இராசி நேயர்களே! நீங்கள் குடும்பப் பெருமையைக் காப்பவர்கள். பெரியவர்களை மதிப்பவர்கள். சமுதாய மாற்றத்திற்கு பாடுபடுபவர்கள். இனிய வார்த்தைகள் இரும்புக் கதவையும் திறந்து விடும் என்று உணர்ந்த நீங்கள் அன்பும் அணுகுமுறையும் கொண்டவர்கள். இந்த சனிப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி இருக்கப் போகிறது.

**கிரகநிலை:** இதுவரை உங்கள் எது இராசியில் இருக்கும் சனி பகவான் விலகி தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு செல்கிறார். மூன்றாம் பார்வையால் சுக ஸ்தானத்தையும் ஏழாம் பார்வையால் அஷ்டம ஸ்தானத்தையும் பத்தாம் பார்வையால் லாப ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

**பலன்கள்:** உங்கள் சகோதர, சகோதரிகளிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் மறைந்து ஒற்றுமை வளரும். அவர்களுடன் சேர்ந்து இனிய பயணங்களைச் செய்வீர்கள். உங்களின் ஆற்றல் அதிகரிக்கும். பகைவர்களை வெற்றி கொள்வீர்கள். உடல் நலம் சீராகும். வருமானம் சிறப்பாக இருக்கும். உங்களின் பெருந்தன்மையை அனைவரும் பாராட்டுவார்கள். அதேநேரம் ஆடம்பரக் கேளிக்கைகளுக்காக செலவு செய்வதைக் குறைத்துக் கொள்ளவும். சில நேரங்களில் யோசிக்காமல் பேசி வம்பில் மாட்டிக் கொள்ள நேரலாம். "யா காவாராயினும் நா காக்க" என்ற வள்ளுவர் வாய் மொழியை எப்போதும் நினைவில் நிறுத்துதல் நலம் பயக்கும். மறைமுக எதிரிகளிடம் கவனமாக இருக்கவும். உங்கள் ரகசியங்களை எவரிடமும் பகிர்ந்துகொள்ள வேண்டாம். உங்களின் பதவியால் சில ஆதாயங்கள் கிடைத்து, மகிழ்ச்சி உண்டாகும். இதன் மூலம் பொது நலக் காரியங்களுக்குச் செலவு செய்வீர்கள்.

திட்டமிட்ட வேலைகளைத் தள்ளி வைக்க வேண்டிய சூழ்நிலை, சில நேரங்களில் உருவாகலாம். எனவே உங்கள் காரியங்களில் கவனமாக இருக்கவும். நேர்மையான எண்ணங்களால் உங்களின் வாழ்க்கைத் தரம் உயரும். அலுவலகத்தில் புதிய பொறுப்புகளை ஏற்று நடத்த நல்வாய்ப்பு உருவாகும். இதனால் மனதில் இருந்த காரணமில்லாத வருத்தங்களும், குழப்பங்களும் மறையும்.

சமூகத்தில் உங்களின் மதிப்பு, மரியாதை உயரும். வழக்கு விவகாரங்களில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும். உங்களின் எண்ணங்களும், செயல்களும் உங்களுக்கு வாழ்வில் உயர்ந்த இடத்தைப் பெற்றுத் தரும். வாகனங்களுக்கு பராமரிப்புச் செலவுகள் செய்ய நேரிடும். தவிர்க்க இயலாத காரணங்களால் சகோதர, சகோதரிகளுக்குப் பணம் செலவழிப்பீர்கள். ஆயினும் புதியவர்களின் நட்பால் கைப்பொருளை இழக்க நேரிடும் என்பதால் அறிமுகமில்லாதோரிடம் கவனமாக இருக்கவும். பயணங்களில் அதிஷ்ட தேவதை தரிசனம் தருவாள். இதனால் பொருளாதார வளமும், சேமிப்பும் உயரும். அரசாங்க உதவிகளும் கிடைக்கும். உங்களின் ஆசைகள் ஒன்றன் பின் ஒன்றாகப் பூர்த்தியடையும்.

உத்தியோகத்தர்களுக்கு அலுவலகப் பணிகள் சிறப்பாக முடியும். எதிர்பார்த்த பதவி உயர்வும், ஊதிய உயர்வும் பெறுவீர்கள். சிலருக்கு விரும்பிய இடமாற்றங்களும் கிடைக்கும். சக ஊழியர்களின் ஆதரவாலும், நட்பாலும் அலுவலகத்தில் உங்களின் அந்தஸ்து உயரும். சில முக்கியப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பீர்கள். உங்கள் வேலைகளை முன்கூட்டியே யோசித்துச் செய்தால் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

வியாபாரிகள் கூடுதல் எச்சரிக்கையுடன் வாணிபத்தில் ஈடுபடவும். எதையும் ஒரு முறைக்கு இருமுறை யோசித்துச் செயற்படுவது அவசியம். மற்றவர்களிடம் பண விடயங்களில் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும். வியாபாரத்தைச் சீரமைப்பதற்கு நீங்கள் சுயமாக மேற்கொள்ளும் முயற்சிகள் நிச்சயம் வெற்றியடையும்.

அரசியல்வாதிகள், மேலிடத்தின் ஆதரவைப் பெறுவீர்கள். ஆனால் அதன் முழுப் பலன்களையும் அனுபவிக்க இயலாத அளவிற்கு மற்றவர்களால் சிறு குறுக்கீடுகளும் தோன்றும். எனினும் மனம் தளராமல் எதிரிகளைச் சமாளிப்பீர்கள். கடினமான வேலைகளையும் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். இதனால் புதிய பொறுப்புகளையும் பெறுவீர்கள். பயணங்களால் நன்மைகள் உண்டாகும். தொண்டர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு செயற்படுவீர்கள்.




கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். உங்களின் முயற்சிகள் அனைத்தும் வெற்றிப் பாதையில் செல்லும். புதிய நட்புகளால் நல்ல வாய்ப்புகளைப் பெறுவீர்கள். சக கலைஞர்களும், ரசிகர்களும் உங்களுக்கு நிறைவான ஆதரவு தருவார்கள். உங்கள் முழுத்திறமையையும் வெளிக் கொணர்வீர்கள். வருமானமும் சீராகவே இருக்கும்.

பெண்கள் மனநிம்மதியைக் காண்பீர்கள். தர்ம காரியங்களிலும், தெய்வ வழிபாட்டிலும் ஈடுபடுவீர்கள். புதிய சொத்துக்கள் வாங்குவதற்கான ஆரம்பகட்ட வேலைகளைத் தொடங்குவீர்கள். குடும்பத்தினருடன் சந்தோஷமாகப் பொழுதைக் கழிப்பீர்கள். ஒற்றுமை அதிகரிக்கும். குடும்பப் பொறுப்புகளை திருப்திகரமாக நிறைவேற்றி மகிழ்ச்சி அடைவீர்கள்.

மாணவர்கள் உற்சாகமான மன நிலையுடன் கல்வியில் ஈடுபடுவீர்கள். உடல் வலிமை பெறத் தக்க பயிற்சிகளில் ஈடுபடவும். வருங்காலத் திட்டங்களுக்காக அடித்தளம் போடுங்கள். விளையாட்டுகளிலும் வெற்றிகளைப் பெறுவீர்கள். உங்களின் தன்னம்பிக்கை படிப்படியாக உயரும்.

**அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள்:** மன உறுதி அதிகரிக்கும். சொத்துக்களை அடைவதில் தடைகள் ஏற்படும். உயர்நிலையில் உள்ளவர்களுடன் மனவருத்தம் ஏற்படும் படியான சூழ்நிலை வரும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம் கவனம் தேவை. வாகனங்கள் மூலம் செலவு உண்டாகலாம்.

**சதயம்:** எதிர்பார்த்த பண வரவு இருக்கும். வீட்டிற்கு தேவையான வசதிகள் செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில் வியாபாரம் சுமாராக இருக்கும். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கலாம். புதிய வாடிக்கையாளர்கள் தொடர்பு உண்டாகும். பழைய சிக்கல்கள் தீர்வதில் தாமதம் ஏற்படும்.

**பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை பகைத்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வது நல்லது. திறமையான செயற்பாட்டால் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் எதிர்பாராத விருந்தினர் வருகையால் விரும்பத்தகாத வாக்கு வாதங்கள் ஏற்படலாம்.

**பரிகாரம்:** சனிக்கிழமைகளில் சனி பகவானை வழிபட்டு வரவும். சனி அஷ்டகம் பாராயணம் செய்யலாம். எருக்கம்பூவை அருகிலிருக்கும் சிவனுக்கு தினமும் அர்ப்பணித்து வர உங்களின் வாழ்வில் முக்கியமான காரியங்கள் அனைத்தும் நடந்தேறும்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதம நீதியரசர்...

இதுகுறித்து ஊடகங்களுக்குக் கருத்துரைத்த அவர், நீதியரசர் விவகாரம் உள்ளடங்கலாக அதிகாரிகளுக்கு எதிராக மகிந்த ஆட்சியில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தவறானவை என்பதை உணர்கிறேன்.

முந்தைய அரசாங்கங்கள் எடுத்த தவறான முடிவுகளை தற்போதைய அரசாங்கமும் எடுக்கக்கூடாது என்றும் இதன்போது நாமல் ராஜபக்ஷ கேட்டுக் கொண்டார். (ந-7)

## மாணவியை...

உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் தரம் 05இல்கற்கும்மாணவிக்கே அடித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, தரம் 05இல் கற்கும் மாணவர்களுக்கு கடந்த புதன்கிழமை பாடசாலையில் ஆசிரியரால் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது.

பரீட்சையின் பின்னர் வினாத்தாளை மாணவர்களிடையே பரிமாறி அதனை மாணவர்களைத் திருத்துமாறு ஆசிரியர் அறிவுறுத்தியுள்ளார்.

அதனையடுத்து மாணவர்கள் தமக்குள் வினாத்தாளைப் பரிமாறி திருத்தும்போது அடிவாங்கியதாகக் கூறப்படும் மாணவி, தனது வினாத்தாளை திருத்திய மாணவிக்கு பிழையான விடைகளை சரியாக எழுதித் திருத்துமாறு கூறியுள்ளார். அந்த மாணவியும் அதனைச் செய்துள்ளார்.

இதனை அவதானித்த ஆசிரியர் இரு மாணவிகளையும் அழைத்து கடுமையாக எச்சரித்து மாணவியைத் தடியால் அடித்துள்ளார்.

அதில் விடைகளை சரியாக எழுதக் கூறிய மாணவி வீட்டிற்குச் சென்று ஆசிரியர் அடித்த விடயத்தைக் கூறிய போது, மாணவியின் தாயார் மாணவியை வைத்தியசாலைக்கு அழைத்து சென்று மருத்துவ பரிசோதனை செய்த போது, மாணவி சிகிச்சை பெறும் அளவுக்கு எதுவும் இல்லை என வைத்தியசாலையில் இருந்து மாணவியை அனுப்பியுள்ளனர்.

அதன் பின்னர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாணவியின் தாயார் ஆசிரியருக்கு எதிராக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, பொலிஸார் ஆசிரியரை விசாரணைக்கு அழைத்து விசாரணைகளின் பின்னர் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு, ஆசிரியருக்கு ஆதரவாக பாடசாலையின் சக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர் பொலிஸ் நிலையம் முன்பாகக் கூடியிருந்த நிலையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, ஆசிரியரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளோம். நீதிமன்றில் வந்து பார்க்குமாறு அறிவுறுத்திய பின்னர் அங்கிருந்து அவர்கள் கலைந்து சென்றனர். (ந-7)

## பாரதப் பிரதமர்...

பிரதமர் மோடி அவர்கள் இரு தினங்கள் இலங்கையில் தங்கியிருப்பார். இதன்போது ஜனாதிபதி அநுர மற்றும் பிரதமர் ஹரிணி ஆகியோருடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார்.

அத்துடன் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளின் பங்களிப்புடன் இரு தரப்பு உயர்மட்டக் கலந்துரையாடலிலும் பிரதமர் மோடி பங்கேற்கவுள்ளதுடன் இதன்போது பல ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன.

மேலும் இந்திய அரசின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட திருகோணமலை சம்பூர் திட்டம், மஹர ரயில் சமிக்ஞை திட்டம் ஆகிய வற்றையும் பிரதமர் மோடி திறந்து வைக்கவுள்ளார்.

இதேவேளை பாரதப் பிரதமரின் திருகோணமலை விஜயத்தின்போது திருக்கோணேஸ்வரர் ஆலயத்தைப் பிரதமர் தரிசிக்க வேண்டும் எனவும் மன்னார் திருக்கேதீச்சரத்தினைப் போல திருக்கோணேச்சரத் திருப்பணிக்கும் இந்திய அரசு ஆவன செய்ய வேண்டும் எனவும் இந்து மாமன்றத்தின் செயலாளர் கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை விடுத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)

## சர்வதேச...

பிரிட்டன் விதித்துள்ள தடைகள் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஆயுதமோதலின் போது தமிழர்களிற்கு எதிராக அவர்கள் இழைத்த குற்றங்களிற்காக, இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகள் சவேந்திர சில்வா, ஜகத் ஜெயசூரிய, வசந்த கரன்னாகொட ஆகியோருக்கு எதிராக பிரிட்டன் விதித்த பயணத்தடைகளை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வரவேற்கின்றது.

பிரிட்டன் விதித்த தடைகளும் அதேபோல் முன்னர் கனடா, அமெரிக்கா ஆகியவை இலங்கையின் அரசியல் தலைவர்கள், இராணுவத் தளபதிகள் ஆகியோருக்கு எதிராக அறிவித்த தடைகளும் இலங்கை அரசாங்கம் தமிழர்களிற்கு எதிராகப் பாரிய குற்றங்களை இழைத்தது என்பதை உறுதி செய்துள்ளன.

இனப்படுகொலை சமவாயத்தில் கைசாத்திட்டுள்ள நாடுகள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னிலையில் இலங்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு இந்தத் தடைகள் உதவக்கூடும்.

ஐக்கிய இராச்சியம், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் தொடர்ந்தும் தனது தலைமைத்துவத்தை வெளிப்படுத்தவேண்டும். இனப்படுகொலை மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்காக, யுத்த குற்றங்களிற்காக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தும் தீர்மானத்தை முன்வைக்க வேண்டும் எனத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

சர்வதேச குற்றங்களை முன்வைத்து பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்காக தொடர்ச்சியாக பரப்புரைகளில் ஈடுபட்ட ஐக்கிய இராச்சியத்தின் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள், பிரிட்டனின் சிவில் சமூகத்தினரை பாராட்டுகின்றனர் என்றும் உருத்திரகுமாரன் தெரிவித்தார். (ந-7)

## மனித...

சென்ற பெரிய பிரித்தானியா இன்று மனித உரிமைகள் குறித்து இலங்கைக்குப் பாடம் கற்பிக்கின்றது என விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

விடுதலைப் புலிகள் அமைப்பின் கொள்கை வாதிகளில் பெருமளவிலானோர் பிரித்தானியாவில் வாழ்கின்றார்கள்.

அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே பிரித்தானியா தற்போது இந்தத் தடையை விதித்துள்ளது. விடுதலைப் புலிகள்அமைப்பின் கொள்கையால் ஈர்க்கப்பட்டவர்கள் இன்றும் நாட்டில் உள்ளார்கள்.

பிரித்தானியாவில் தற்போதைய முறையற்ற செயற்பாடு அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பை உயிர்ப்பிக்கும் வகையிலுள்ளது. ஏனெனில் கடந்த காலங்களில் நாட்டில் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய தரப்பினர் தேசியத்துக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள். நினைவேந்தல் பகிரங்கமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. பாதுகாப்புத் தரப்பு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கின்றது என்றார். (ந-7)

## மியன்மார்...

மியன்மாரில் ஏற்பட்ட நில அதிர்வில் இதுவரை சுமார் 144 பேர் உயிரிழந்ததாகவும் 732 பேர் காயமடைந்துள்ளதாகவும் மியன்மார் இராணுவ அரசாங்கத்தின் தலைவர் மின் ஆங் ஹ்லைங் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தாய்லாந்தையும் இந்த நிலநடுக்கம் தாக்கியதால் தலைநகர் பாங்கொக்கில் 9 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்நில நடுக்கத்தினால் அங்குள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டிடங்களும் சேதமுள்ளதாக தெரியவருகிறது. (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2025.03.28
சீட்டிழுப்பு இலக்கம் 5789
V 1 6 8 3 2
அத சம்பத V 8 8 3 2
சீட்டிழுப்பு இலக்கம் 0364

தன நிதானய
திகதி - 2025.03.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1819
S 21 29 45 55 S
15211

மெகா பவர்
திகதி 28/03/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2137
P 13 14 47 62 73

ஜய
திகதி 2025.03.28
சீட்டிழுப்பு இலக்கம் 057
E 1 0 0 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4031
சீட்டிழுப்பு திகதி 28.03.2025
F 02 29 35 55
F

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.03.28
சீட்டிழுப்பு இலக்கம் 1098
மிதுனம் 31 37 45 58 மிதுனம்
73629 21

சுபிரி வாசனா சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
28.03.2025 வெற்றி வாரம் 497
C 7 1 2 1 3 0
54582
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.34,467,448.40

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2763
சீட்டிழுப்பு திகதி 2025.03.28 தினம் வெள்ளிக்கிழமை
31 57 59 68 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,032,402.40

சனிதா
திகதி 28.03.2025 வெற்றி வாரம் 4924
08 13 32 42 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,613,923.20
86222

சசிரி
வெற்றி வாரம் 652
சீட்டிழுப்பு திகதி 28.03.2025
வெள்ளிக்கிழமை
05 13 29
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

லக்ன வாசனா
சீட்டிழுப்பு வாரம் 4475
சீட்டிழுப்பு திகதி 28.03.2025 தினம் வெள்ளிக்கிழமை
26 27 41 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,088,850.80
183608

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 25 04 10 13 22
1939
28.03.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.570,060,277.20

அட கோடிபதி
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2589
சீட்டிழுப்பு திகதி : 2025.03.28
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,700,364.00
02 52 66 76 F
489052


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# TECHNO WORLD
## தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

## தொழில்நுட்பப் பிரிவு
# A/L 2027
ஆரம்பம் : 30.03.2025
(ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 8.30 மணி

A/L 2025, 2026 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு : 077 0175 346
(C-2564)




குறும்படம்
திரையிடலும்
கலந்துரையாடலும்
காலம் : 29.03.2025
சனிக்கிழமை
நேரம் : மாலை 4 மணிக்கு
இடம் : ஈழத்திரை
செல்வா மினி திரை அரங்கு
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
பிரவேசம் இலவசம்
தொடர்புகளுக்கு : 077 651 0375
ஈழ சினிமா ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.
SCOPE Strengthening Social Cohesion and Peace in Sri Lanka
Co-funded by the European Union | german cooperation | Implemented by: giz
(3763)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

# Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 220/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 259/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 420/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg பொன்னி | - 243/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 250/= | |
| 1Kg கடலை | - 399/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 788/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 220/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2870/= | ~~3000/=~~ |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 220/= | |
| 1Kg சோயா | - 380/= | |
| 01 ஓசன் மீன்ரின் | - 380/= | ~~560/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 170/= | ~~240/=~~ |

400g Anchor 1010/= ~~1050/=~~ Max 01
அங்கர் யோகட் 50/= ~~80/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
(975)
Happy Supermarket
0777 8080 30

# A/L ICT வகுப்புக்கள் திரு.இ.குமரன்
## A/L 2027 ஆரம்பம்
ஞாயிற்றுக்கிழமை 30.03.2025 5 pm
திரு.இ.குமரன் A/L ICT
100% Practical-Oriented Class Mr.R.Kumaran-B.Sc.
Computer Lab
Study Guide
Unit Exam
Past Papers
Revision
ICT துறையில் 23 வருட கற்பித்தல் அனுபவம்
MIS ICT COLLEGE TP:0776577359,#74, Sabapathy Lane, Jaffna. தலையாழி. ்பிரம்படி
(962)

# உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2566)

# புகையிலை விற்பனைக்கு
அறுவடைக்குத் தயாராக உள்ள பாணிப்புகையிலை (வடமராட்சி) 6500 கன்றுகள் விற்பனைக்கு.
076 287 8157
(974)

# இளங்கலைஞர் மன்றம் நல்லூர்
## மாதாந்தக் கலையரங்கு

காலம் :- 30.03.2025 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- பி.பகல் 4.30 மணி
இடம் :- இளங்கலைஞர் மன்ற மண்டபம், சட்டநாதர் வீதி நல்லூர்.

### குழுஇசை
பாட்டு :- யாழ். பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்கள் இ.அ.க பீடம்
வயலின் :- ஈ.வனஜா
மிருதங்கம் :- மு.சுலக்சன்
கஞ்சிரா :- பு.வேணுகாந்தன்
தபேலா :- ந.கேதாரநாத்

### வயலினிசை
வயலின் :- சிரஞ்சீவி ரமணசர்மா லயசர்மா
மிருதங்கம் :- லயஞான வினோதன் பிரம்மஸ்ரீ வ.ரமணசர்மா
கஞ்சிரா :- க.ஆதித்தியன்
கடம் :- உ.ஹிதுஷன்
முகர்சிங் :- கௌ.அரோசன்
தாளம் :- ர.கானாமிருத சர்மா

### இசையரங்கு
பாட்டு :- கலாபூஷணம் பொன்.ஸ்ரீ வாமதேவன்
உடன்பாட்டு :- ச.யதுர்சன்
வயலின் :- கா.குகபரன்
மிருதங்கம் :- அ.அமிர்தலோஜனன்
கஞ்சிரா :- அ.சண்முகப்பிரியன்
முகர்சிங் :- நி.மோகனதர்சன்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

புதிய பிரிவு கலை வகுப்புக்கள் கட்டணமின்றி சிறந்த ஆசிரியர்களால் ஆரம்பம்
20.04.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு

| | | |
|---|---|---|
| பாட்டு | இசைக்கலைமணி | ந. இராம்குமார் |
| | கலாவித்தகர் | அ.அமிர்தலோஜனன் |
| மிருதங்கம் | கலாவித்தகர் | ச.சிவகுமார் |
| நடனம் | பரதவாணி | வி.மதிவாணி |
| வீணை | கலாவித்தகர் | உ.குமுதா |
| வயலின் | நுண்கலைமாணி | கு.சயந்தன் |

இணைய விரும்பும் மாணவர்கள் இணைந்து கொள்ளலாம். மேலும் சனி, ஞாயிறுக்கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் வகுப்புக்கள் நடைபெறுகிறது. மேலதிக தகவல்களுக்கு முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள் - 0212225331

நிர்வாகசபை,
இளங்கலைஞர் மன்றம் நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(3767)

# NEW SCIENCE HALL
## KANNATHIDDY ROAD, JAFFNA

## 2027 A/L கணித உயிரியல் பிரிவுகள்
நேரடி வகுப்புக்கள் மற்றும் நிகழ்நிலை வகுப்புக்கள்

| தமிழ்மொழி மூலம் | ENGLISH MEDIUM |
|---|---|
| **PHYSICS** | **PHYSICS** |
| திரு. G.பிரபா | MR.M.KUGANESWARAN |
| திரு. N.கபிலன் | MR.R.RAAKULAN |
| திரு. R.ராகுலன் | |
| **CHEMISTRY** | **CHEMISTRY** |
| திரு. G.BENO | MR.G.BENO |
| திரு. V.K.நந்தா | MR.V.K. NANTHA |
| **BIOLOGY** | **BIOLOGY** |
| திரு. K.இராகவன் | MR.V.S.GUNASEELAN |
| திரு. R.குகானந்தன் | |
| **COM.MATHS** | **COM.MATHS** |
| திரு. P. செந்தில்நாதன் | MR.P.SENTHILNATHAN |
| திரு. V.S. சிவகரன் | MR.V.S.SIVAKARAN |

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
ஆரம்பம் : 30.03.2025 (SUNDAY) 9.15 AM
நிகழ்நிலை வகுப்புகளுக்கு சகல மாவட்டங்களிலும் இருந்து இணைந்து கொள்ளலாம்...
தொடர்புகளுக்கு :
076 566 3006, 076 569 3006, 077 791 7611
https://facebook.com/New Science hall
(C-2565)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.